Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 11 திங்கட்கிழமை (25.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 268

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
கோடைக்கால விலைக்கழிவு ஜூன் 30 வரை மட்டுமே
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலைகளில் BBQ
(C/1615)
தொடர்பு: 0771064385 0776943479
70/6, K.K.S. Road, JAFFNA
















# கிளிநொச்சி நகர் கடைகள் உரியவர்களிடம் கையளிப்பு



(கிளிநொச்சி)

இராணுவத்தினர் வசமிருந்த கிளிநொச்சி நகர்ப்பகுதியிலுள்ள கடைத்தொகுதிகள் உரியவர்களிடம் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன. கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி பரவிப் பாஞ்சான் பகுதியில் ஏ-9 வீதிக் கருகில் அமைந்திருந்த கடைத் தொகுதிகளில் ஆவணங்கள் உறுதிப் படுத்தப்பட்ட 25 கடைத் தொகுதிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்தக் கடைத்தொகுதிக் கையளிப்பு நிகழ்வில் தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.ரட்னாயக்க, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, 57ஆவது படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் ரேணுகா றொபேல், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் உரிமையாளர்களிடம் கடைத் தொகுதிகளைக் கையளித்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகஷ்ட பிரதேச படிகளை மீளாய்வு செய்ய இணக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடமையாற் றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு நிறுத்தப்பட்ட அதிகஷ்டப் பிரதேச, கஷ்ரப்பிரதேச படிகளை மீளவும் வழங்குவதற்கு வடமாாண ஆளுநர் உறுதியளித்துள்ளதாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் புவ னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கியூபா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரோரா மற்றும் வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா உட்பட பலர் வரவேற்றனர்.

## இலங்கையின் மனித உரிமை நிலை ஐ.நா.வில் ஆய்வு நடத்த முயற்சி

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐ.நா., ஜெனிவாவில் ஆய்வு ஒன்றை நடத்தத் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய கால இடைவெளிக்குள் விமர்சனம் என்ற திட்டத்தில் பல நாடுகளுடன் சேர்ந்து இலங்கையும் பங்குபற்றும் எனவும் இத்திட்டம் இந்த ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்திற்குஇடையே ஜெனிவாவில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலகளாவிய கால இடைவெளிக்குள் விமர்சனக் கூட்டம் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற போது கலந்துரையாடப்பட்டது போன்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை செயற்படுத்துவது குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உலகளாவிய கால இடைவெளிக்குள் விமர்சனக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட 85 பரிந்துரைகளில் 52ஐ ஏற்றுக் கொண்ட இலங்கை 25ஐ நிரா கரித்ததாகவும் 8ஐ மாத்திரமே செயற்

19 ஆம் பக்கம் பார்க்க

# காணிகளை சுவீகரிக்க சட்டத்தில் இடமில்லை

## மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்கிறார் சந்திரகுமார் எம்.பி.



(கிளிநொச்சி)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட விதிமுறைகளின்படி மக்களுக்குச் சொந்தமான காணிகளை எவருமே சுவீகரிக்க முடியாது. எனவே பதட்டமடைய வைக்கும் வீண் வதந்திகளை நம்பி மக்கள் அச்சம் கொள்ளக் கூடாதென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்றைய தினம் கிளிநொச்சி நகரப்பகுதியிலுள்ள கடைத் தொகுதிகளை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், மக்களின் நிலங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தி வருவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் கூறப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி இந்திய நல்லுறவைப் பேண வேண்டும்

## அரசுக்கு கூறுகிறது ஐ.தே.க.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தி கொள்வதற்கு அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான சகோதரத்துவத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி 13 வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். பிரதான எதிர்கட்சி என்ற வகையில் நாங்கள் கூறுவது என்னவென்றால், பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து அறிக்கை விடுவது மாத்திரம் போதுமானது இல்லை. இலங்கை - இந்திய உறவை வலுப்படுத்த வேண்டும் எனின் அரசியல் யாப்பை புறந்தள்ளி வைத்து விட்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை யாகும் எனத் தெரிவித்தார்.

# முதலீட்டு நடவடிக்கைகளை காணிப்பிரச்சினை பாதிக்கும்



## ஐ.நா.நிறுவனம் தெரிவிப்பு

காணிப் பிரச்சினை முதலீட்டு நடவடிக்கைகளை மிக மோசமாகப் பாதிக்கும்என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி.) தெரிவித்துள்ளது.காணி உரிமை மற்றும் பதிவு, நடவடிக்கைகளினால் வடக்கு, கிழக்கில் முதலீடுசெய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் டக்ளஸ் கீ தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் அரசாங்கம் காணிகளை கைப்பற்றுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலயத்தில் முதலீட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# கொழும்புக்கு வருகை தரும் மேனன் ஜனாதிபதி, கோத்தாவுடன் பேச்சு

(கொழும்பு)

எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்புக்கு வருகைதரவுள்ள இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், ஜனாதிபதி மகிந்த மற்றும் படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ரஜபக்ஷ ஆகியோருடன் மட்டுமே பேச்சு நடத்துவாரெனவும் இந்தப் பேச்சின் போது இலங்கை தொடர்பான முக்கியமான விவகாரங்கள் குறித்த புதுடில்லியின் கவலையை வெளிப்படுத்துவாரெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

# வாழைநார் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்த மேலும் நிதி ஒதுக்கீடு



(யாழ்ப்பாணம்)

வாழைநார் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பான எதிர்கால பயிற்சிகள் மற்றும் உற்பத்திகளுக்கென சுமார் 4 மில்லியன் ரூபாவை ஒதுக்க பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்று வலி.வடக்கு வாழைக்குலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. அதன் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது வாழைநார் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் மேலதிக செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

ஏற்கனவே இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடியதன் பயனாக வாழைநார் சார்ந்த உற்பத்திகள் தொடர்பிலான இரு நிபுணர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் வாழை உற்பத்திகள் அதிகமாகவுள்ள யாழ்ப்பாணம், எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இத்துறைசார்ந்த பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 150 பேர் இப் பயிற்சியினை மேற்கொண்டு இருந்தனர்.

அத்துடன் இந்தியாவிற்குச் சென்று மேலதிகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 24 ஆயிரம் மெற்றிக் தொன் வாழை உற்பத்தி செய்யப்படுவதுடன் இது சார்ந்து 4000 பேர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 8083 ஹெக்டயர் நிலத்தில் வாழைச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந் நிலையில் வாழைக்குலைகள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் வாழைமரங்கள் பயன் பெறாமல் ஒதுக்கப்படுகின்றன. இவ்வாறு ஒதுக்கப்படும் வாழைமரங்களிலிருந்தே மேற்படி உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சித்த ஆயுர்வேத சபை பொதுக்கூட்டம்

(வேலணை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சித்த ஆயுர்வேத பாதுகாப்பு சபையினது கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பிரதேச செயலர் அலுவலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி அ.பிறிட்டோ டக்ளஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் குருநகரில் இயங்கி வருகின்ற சித்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் முறிவு நெறிவு வைத்தியராகக் கடமையாற்றி வருகின்ற எஸ்.சௌந்தரராசனின் முறிவு நெறிவு சம்பந்தமாக விசேட விரிவுரை ஒன்று இடம் பெறவிருக்கின்றது. (05)

# தெல்லிப்பளையில் இடம்பெற்ற பொலிஸ் நடமாடும் சேவை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நடமாடும் சேவையை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், வலி. வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன், சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார், தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் சாந்தமோகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நடமாடும் சேவையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை, ஆயுர்வேத வைத்திய சாலை, பொலிஸ் மருத்துவப் பிரிவு ஆகியவற்றினால் இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டதுடன் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறுகுற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸ் பதிவுகள் இடம்பெற்று முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

# மீளக்குடியமர்ந்த பகுதிகளில் பாடசாலைக்கு இலவச மின்சாரம்


(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள மீள்குடியேற்றப் பாடசாலைகளிற்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

வலி. வடக்கில் மீள இயங்கியுள்ள வலித்தூண்டல் வித்தியாலயம், மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இந்த இலவச மின்னிணைப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்காக அதிபர்கள் மின்சார சபைக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேலதிக தகவல்களை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# ‘எனது தரிசனங்கள்’ புகைப்படக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

‘எனது தரிசனங்கள்’ (My Visions) எனும் தொனிப்பொருளில் புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தினதும், Allaince France யாழ்ப்பாணக் கிளையினதும் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

எனது தரிசனங்கள் புகைப்படக் கண்காட்சியினை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல புகைப்படப் பிடிப்பாளர் Dorothy Shoes வைபவரீதியாக திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குனர் தே.தேவானந், Allaince France யாழ்ப்பாணக் கிளையின் இயக்குனர் Gerad Robuchor, புகைப்படப் பிடிப்பாளர் Dorothy Shoes ஆகியோர் உரையாற்றினர்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் கடந்த 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற்ற களப்பயிற்சியில் பங்குகொண்ட மாணவர்களின் 48 புகைப்படங்கள் இங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இதில் 20 பேர் பங்குபற்றியிருந்தனர். ‘புதிய அணுகுமுறையூடாக புகைப்படக் கலையை அணுகி ஊடகமாகப் பயன்படுத்தி செய்தி சொல்லுதல்’ என்ற கருப்பொருளில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகைப்படவியலாளர் Dorothy Shoes ஆல் இக் களப் பயிற்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தகப்பனும் மகளும் தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

இளம் தந்தையொருவர் தனது 8 வயது மகளுக்கு நஞ்சை கொடுத்து தானும் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் ஒன்று நேற்று உரும்பிராய் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் மனைவியை இழந்த தெய்வேந்திரம் பிரசன்னா (வயது - 31) என்ற 4 பிள்ளைகளின் தந்தை, 3 ஆண் பிள்ளைகளும் உறவினர் வீட்டில் வளர குறித்த 8 வயது மகளுடன் தனித்து வாழ்ந்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கிருமி நாசினியை உணவுடன் கலந்து தகப்பனும் மகளும் உண்ட பின்னர் மீண்டும் நேற்றுக்காலை 8.00 மணியளவில் இருவரும் மீண்டும் நஞ்சருந்தியுள்ளனர்.

பின்னர் மனைவியின் சகோதரியிடம் விபரத்தை தெரிவித்துள்ளார். விடயமறிந்த உறவினர் விஷம் உட்கொண்ட இருவரையும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர். தகப்பனும் மகளும் தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எஸ்)

## யாழ். நகரில் விபத்து

(யாழ்ப்பாணம்)

பஜிரோ வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி கஸ்தூரியார் வீதிச் சந்தியில் நேற்றிரவு விபத்தில் சிக்கின.

மோட்டார் சைக்கிளில் வந்த பயணி படுகாயமடைந்த நிலையில் பஜிரோ வகனம் தப்பிச் செல்ல முற்பட்டது. இதனை அவதானித்த யாழ். பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள பொலிஸார் குறித்த பஜிரோவை மடக்கிப் பிடித்தனர். காயமடைந்த நபா யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(05)

# சான்றோர் கௌரவிப்பு

(வேலணை)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள (இராமநாதன் வீதி) சரஸ்வதி மண்டபத்தில் சமய, சமூக மற்றும் பல்துறை சார்ந்த வகையில் நாட்டிற்கும் மக்களுக்கும் சிறப்பாக தொண்டுகளை ஆற்றிக் கொண்டிருக்கும் பல்துறை சார்ந்த வித்துவான்கள், சான்றோர்கள், இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

பேராசிரியரும் வைத்திய கலாநிதியுமான ஜெ.ஜெயலன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சான்றோர்களுக்கான கௌரவப் பட்டங்களை பிரதம விருந்தினர்கள் வழங்கி அவர்களை கௌரவிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## தேர்த்திருவிழா

பருத்தித்துறை சிவன் கோவிலின் வருடாந்த இரதோற்சவம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சுவாமி தேரில் ஆரோகணிக்கும் காட்சியும் இடம் பெறவுள்ளது. இதேவேளை, சுழிபுரம் பறாளை ஈசுர விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவும் இன்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெறவுள்ளது. (01)


சிறு விளம்பரம்

புத்தகம் விற்பனைக்கு

இந்து சமய· திணைக்களம் கொள்வனவு செய்த புத்தகம் “உலகமயமாதல்” சி.குமாரலிங்கம் எழுதியது.கிடைக்கும் இடம் அன்னை புத்தகசாலை, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/143)


# பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேள்ட் விசன் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்காக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 15 மாணவர்களும், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 15 மாணவர்களும், வட்டு. மத்திய கல்லூரியில் 14 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த அன்பளிப்பு வைபவம் விரைவில் நடைபெறவுள்ளதாகவும், துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்பாக பெறும் மாணவர்கள் பாடசாலைக் கல்வி முடிந்து வீடு செல்லும்போது துவிச்சக்கர வண்டியினைப் பாடசாலைக்கு திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் வழங்கப்படுகிறது. (06)

# பாடசாலை மாணவர்களுக்கு வாக்காளர்பதிவு விழிப்புணர்வு

## யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையே வாக்காளர் பதிவு மேற்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

25 வீதம் முதல் 30 வீதமானவர்கள் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள தவறுகிறார்கள். இதன் காரணமாக தேர்தல் ஆணையாளரினால் தயாரிக்கப்பட்ட கடிதம் மற்றும் சுற்றறிக்கை கல்வி அமைச்சினூடாக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் ஊடாக வாக்காளர் இடாப்பின் முக்கியத்துவம் பற்றி விளக்க மளிக்கப்பட்டு வாக்காளர் படிவம் கையளிக்கப்படவுள்ளது.

தற்போது உயர்தரம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கு போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு வாக்காளர் இடாப்பு தேவைப்படும் காரணத்தினால் ஒவ்வொரு பாடசாலை மாணவர் களும் வாக்காளர் இடாப்பு தொடர்பாக அறிவூட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டு இதனைத தெளிவுபடுத்தினால் 5% மான முன்னேற்றத்தினை அதிகரிக்க வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது.

பாடசாலை அதிபர்கள், மாணவர்களுக்கு வாக்காளர் பதிவு விழிப்புணர்வுக ளை ஏற்படுத்தி பதிவுகளை மேற் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்)

# ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(முழங்காவில்)

கிளிநொச்சி -ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 61ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் திருமதி.ந.கனகசபை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.முருகவேல், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் ஆகியோரும். கௌரவ விருந்தினர்களாக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, கிராம சேவையாளர் க.இராஜகோபால் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (112)

# இலவச கண் பரிசோதனை



(யாழ்நிருபர்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் உதவி பெறப்பட்டு அதனூடாக களபூமியைச் சேர்ந்த லண்டனில் வதியும் புரவலர் க.பாலையாவின் நிதி அனுசரணையின் கீழ்.இலவச கண் பரிசோதனை அண்மையில் மூளாய் வைத்தியசாலையில் நடாத்தப்பட்டது. இதில் நாற்பது மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பரிசோதனையின் பின்னர் இருபது மாணவர்களிற்கு கண்ணாடியும் ஏனைய மாணவர்களிற்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் ஐயனார் ஆலய அறங்காவலர் க.சோமசேகரம்,கோட்டக் கல்விப் பணிப்பாளர பு.சிறிவிக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)

# தமிழ்பேசும் பொலிஸார் கடமையில் ஈடுபட வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ நிலையங்களில் தமிழ் மொழி மூல பொலிஸார் கடமையாற்றுவது குறைவானதாக இருப்பதால் முறைப்பாடுகளை உரிய வகையில் தெரிவிக்க முடியாமல் இருப்பதாக கிளிநொச்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு சகோதர மொழி பேசும் பொலிஸாரே அதிகளவில் கடமையாற்றுவதால் மக்கள் தங்களது முறைப்பாடுகளை தெரிவிக்க சிங்கள மொழி தெரிந்தவர்களிடம் பணம் கொடுத்து மொழி மாற்றம் செய்யப்பட்டே முறைப்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் பணம் செலவாவதுடன் அவலகரமான விடயம் குறித்து தெரிவிப்பதற்கு தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மொழிப் பிரச்சினையைத் தீர்க்க ஓரளவேனும் தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (77)

# துப்புரவற்றதாக காணப்படும் வேலணை சாட்டிக்கடற்கரை

(வவுனியா)

யாழ்ப்பாணம்- வேலணை சாட்டி கடற்கரை துப்புரவில்லை எனவும் அங்குள்ள உடைமாற்றும் அறைகள் துர்நாற்றம் வீசுவதாகவும் சுற்றுலாப்பயணிகள் விசனம் தொிவிக்கின்றனர்.

தீவுப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய கடற்கரையாக காணப்படும் சாட்டி கடற்கரை, வேலணை பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ளது. அங்கு சுற்றுலாப் பயணிகள் வரும் வாகனங்களுக்கு தரிப்பிட பணம் வசூலிக்கப்பட்டும் வருகின்றது. இப்பணம் கடற்கரை பராமரிப்புக்கு என தெரிவிக்கப்பட்ட போதிலும், கடற்கரை கழிவுப் பொருட்கள் நிறைந்தும் கடற்தாவரங்களால் நிரம்பியும் காணப்படுவதுடன் பெண்கள் உடை மாற்றும் அறை துர்நாற்றம் வீசுவதாகவும் சுற்றுலாப்பயணிகள் விசனம் தெரிவிககின்றனர்.

எனவே இப்பகுதியை மேலும் துப்புரவாக பேணும் சந்தர்ப்பத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரும் பிரதேசமாக மாற்ற முடியுமெனவும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (160)

# பாடசாலைகளுக்கு கணினித் தொகுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 3 பாடசாலைகளுக்கு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக 2 இலட்சத்து 60ஆயிரம் ரூபா பெறுமதியான கணினித் தொகுதிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவினால் கடந்த வெள்ளிக்கிழமை அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

மாணவர்களின் பயன்பாட்டிற்கு அமைவாக நாமல் ராஜபக்ஷவின் இணைப் பாளர் குழுவினர் குறித்த ஒவ்வொரு பாடசாலைக ளுக்கும் விஜயம் செய்து கணினித்தொகுதிகளை உரிய வகையில் பூட்டி பயன்படும் வகையில் மாணவர்களிடம் கையளித்தனர். (04)


## நாடிவந்து அருள் நயந்திட வேண்டுமையா!



இயற்கை எழில் கொஞ்சும்
கந்தவனப் பதியிலே
இனிதாய்க் கோயில் கொண்ட
கந்தவன கந்தனே!
தேசமெல்லாம் இருந்து
தேடிவந்து பக்த அடியார்
தேவையெல்லாம் தீர்க்க
நாடிவந்து அருள்
நயந்திட வேண்டுமையா
கந்தா கடம்பா கதிர்வேலா
பார் போற்றும் மயில் வாகனனே
கடைக்கண்ணால் பார்க்காயோ
கண்திறந்து பாராயோ.

திக்கமூர்-சுதா

பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி மஹோற்சவம் : இன்று 07ஆம் திருவிழா


# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இரு வீதிகள் திறந்துவைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை புனரமைக்கப் பட்ட இரண்டு வீதிகள் மக்கள் பாவணைக்கு திறந்து வைக்கப் பட்டுள்ளது. புலோப்பளை குணத்தார்பள்ளம் வீதி மற்றும் புலோப்பளை கடற்கரை வீதி என்பனவே திறக்கப்பட்ட வீதிகள் ஆகும். அத்தோடு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் சிபார்சுக்கு அமைய புலோப்பளை பிரதான வீதியும் மற்றும் கடற்கரை வீதிக்கு செல்லும் வீதியும் புனரமைப்ப தற்கு நாமல் ராஜபக்ஜ வினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி வீதிகள் திறந் -துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தனியார் போக்குவரத்து துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர நாமல்ராஜபக்ச கிளிநொச்சி மா வட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நின்றுவிடும். ஆண்டவனுடைய முடிவில்லாத நாட்கள் அதற்கும் உண்டு.

- பிரையண்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை : 021222018
thinamurasu@live.com

## அடுத்த இந்திய ஜனாதிபதி?

இந்தியாவின் 13–வது குடியரசுத் தலைவராக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி இன்னும் சில நாட்களில் தெரிவாகி விடுவார் என்று கருதப்படுகிறது. ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலுள்ள கட்சிகளின் ஒருமித்த கருத்தோடு அவரை வேட்பாளராக நிறுத்த காங்கிரஸ் தலைமை முயன்றாலும் இடையில் அப்துல் கலாம், மன்மோகன்சிங், சோம்நாத் சட்டர்ஜி ஆகியோரின் பெயர்களை முன்மொழிந்து மம்தா பானர்ஜி பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஆனால் அவரோடு சேர்ந்து குரல் கொடுத்த சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் மனம் மாறி பிரணாப்பிற்கு ஆதரவு தெரிவித்து விட்டதால், மம்தா பானர்ஜி தனியானார். இதனால் ஜனாதிபதியாகப் போகும் பிரணாபின் நிதியமைச்சர் பதவி யாருக்குக் கிடைக்கப் போகிறது என்ற கேள்வியுடன், மம்தாவின் திரிணமுல் காங்கிரஸ் வெளியேறுமெனில், ரயில்வே அமைச்சர் பதவியும் மாறலாம் எனத் தெரிகிறது. மம்தாவின் இழப்பை முலாயம் சிங் மூலம் ஈடுசெய்ய அந்த அமைச்சு சமாஜ்வாதி கட்சிக்கு வழங்கப்படலாம்.

இந்திய ஜனாதிபதிப் பதவி என்பது வெறும் ரப்பர் ஸ்டாம்ப் தான் என்று கிண்டல் செய்யப்பட்டாலும் ஆட்சிக் கூட்டணியில் சிக்கல் வரும்போது அவரே தீர்மானகர சக்தியாக மாறுவார். அதனால்தான் கூட்டணிக்கட்சிகளின் ஆட்சியே சாத்தியம் என்றாகிவிட்ட இன்றைய நிலையில், எல்லாக் கட்சிகளுமே ஜனாதிபதித் தெரிவில் பரபரப்புக் காண்பிக்கின்றன.

எல்லா கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது நபரை ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுப்பதுதான் நல்லது என்று சிலர் தொடர்ந்து வலியுறுத்தியும் வருகிறார்கள். அப்படி இதுவரை போட்டி இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே இந்திய ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி. எமர்ஜென்சிக்கு பிறகு இந்திரா காந்தி தேர்தலில் தோற்று, வந்த ஜனதா கட்சியின் ஆட்சியில் 1977ல் நடந்தது அந்த ஜனாதிபதித் தேர்தல். ரெட்டியை எதிர்த்த 36 வேட்பாளர்களின் மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டு ரெட்டி போட்டியின்றி தேர்வானதாக அறிவிக்கப்பட்டது. எனவே அதுவும் ஒருமித்த ஆதரவு அல்ல.

பிரணாப் முகர்ஜி இந்திய நாடாளுமன்றத்தின் மிக நீண்டகால உறுப்பினர். காங்கிரஸ் கட்சிக்குள்ளும் வேறு கட்சிகளுடனும் நெருக்கடி நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னுக்குத் தள்ளப்படுபவர் இவர்தான். எந்த கட்சியின் தலைமையாக இருந்தாலும் சரி விடிய விடிய பேசி சமரச தீர்வு காண்பதில் வித்தகர். ஊழல் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதவர். பிரதமர் பதவி தவிர, அனைத்து முக்கிய பதவிகளையும் வகித்த அனுபவசாலி.

இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது, அவரது அமைச்சரவையில் இரண்டாம் இடத்தில் இருந்தார். அப்போதைய நிலையில் இவர்தான் இடைக்காலப் பிரதமராக பதவியேற்றிருக்க வேண்டும். ஆனால், அப்போது ஜனாதிபதியாக இருந்த கியானி ஜைல்சிங், மரபுகளை மீறி, ராஜீவ் காந்தியை இடைக்கால பிரதமராகப் பதவியேற்க அழைத்தார். அப்போது ராஜீவ், மத்திய அமைச்சராகக் கூட இல்லை. அப்போது முதல் காந்தி குடும்பத்துடன் பிரணாபுக்கு உரசல் இருந்தே வருகிறது.

பிரணாப் முகர்ஜியை தங்கள் குடும்பத்தின் விசுவாசியாகவோ, நம்பிக்கைக்குரியவராகவோ சோனியா குடும்பத்தினர் கருதவில்லை. அடுத்த பிரதமராக அவரது பெயர் சிபார்சுக்கு வருவதை விட, ஜனாதிபதியாக்கி விடுவது பரவாயில்லை என்று கருதியே காந்தி குடும்பம் இந்தத் தெரிவைச் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்தப் பதவிக்கு போட்டியிடத் தகுதி வாய்ந்த நபர்களில் தானும் ஒருவர் என்று பலரையும் பேச வைத்தே பிரணாப் வென்றிருக்கிறார். இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி மிக விவரமானவர் என்பதில் சந்தேகமில்லை.

– ஆசிரியர்

# நட்புறவை வலுப்படுத்த மதத் தலைவர்கள் சந்திப்பு

மன்னாரில் தமிழ், முஸ்லிம் மக்களுக் கிடையிலான உறவில் அண்மைக் காலமாக ஏற் பட்டு வரும் இடைவெளியைக் குறைத்து இரண்டு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும், நட்புறவையும் வலுப்படுத்தும் ஆரம்பக் கட்ட முயற்சியாக கடந்த சனிக்கிழமை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகைக்கும், மன்னார் முஸ்லிம் சமய, சமூகத் தலைவர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை மன்னார் சர்வமதப் பேரவை மேற்கொண்டிருந்தது. இச்சந்திப்பு தொடர்பாக மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில்,

இச்சந்திப்பு சுமுகமானதாகவும், சினேகபூர்வமானதாகவும் அமைந்ததோடு பரஸ்பர கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும், மன ஆதங்கங்களை வெளிப்படுத்தவும் சிறந்த களமாக அமைந்திருந்தது.

மன்னாரில் உள்ள அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்கள், அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து மிகுந்த வேதனை கொண்டுள்ளனர். இம்முறுகல் நிலையை மேலும் வளரவிடாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை சந்திக்க வைத்து பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வழிசெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தனர்.

மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு மன்னாரில் இன, மத நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக இச் சந்திப்பை மன்னார் சர்வமதப் பேரவை ஏற்பாடு செய்தது என தெரிவித்தார்.

மீள்குடியேற்றம், வேலைவாய்ப்பு போன்றவற்றில் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணாக நடந்த பாரபட்சங்களை மன்னார் ஆயர் இதன்போது எடுத்து விளக்கினார்.

அதேபோன்று முஸ்லிம் சமய, சமூக தலைவர்களும் தாம் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாகவும், அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகள் தொடர்பாகவும் தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர்.

இச்சந்திப்பு முதல்கட்ட சந்திப்பாக அமைந்தது.

எதிர்வரும் காலத்தில் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என அனைத்துத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர். அடுத்த கட்ட சந்திப்பில் கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீனையும் அழைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மன்னாரில் இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த மன்னார் சர்வமதப் பேரவை தொடர்ந்து தன்னை அர்ப்பணித்துப் பாடுபடும் என தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

## சிறுவர் நிதிய பணிப்பாளர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சிறுவர் நிதியத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான திட்டப்பணிப்பாளர் கொத்பிறி மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்திற்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்டு அலங்காரத் தையல் பயிற்சியினை பூர்த்தி செய்து சுய தொழிலில் ஈடுபடும் யுவதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இவ் விஜயத்தின்போது, இளைஞர் தொழில் வழிகாட்டல் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் சில திட்டங்களைப் பார்வையிட்டதுடன் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்தார்.

இவ் விஜயத்தின்போது ஆசியாவுக்கான திட்ட முகாமையாளர் எவ்லி, இலங்கைக்கான தேசிய பணிப்பாளர் ஜெகநாதன், இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர் திலக், மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் பேனாட் பிரகாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## உழைப்பாளிகளுக்கு கௌரவம்

(கஹவத்த)

கஹவத்த பெருந்தோட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டிற்கு அதிக வருமானம் ஈட்டித் தரும் கடுமையான உழைப்பாளிகளை பாராட்டி கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வு. நாவலப்பிட்டி கெட்டபுலா தோட்டத்தில் கஹவத்த தோட்ட நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கஹவத்த பெருந்தோட்ட நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மெரில் ஜே.பெர்னாண்டோ, முகாமைத்துவப் பணிப்பாளர் றொசான் இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு பின்னர்விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

விடுவிக்கப்பட்டவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து சமூகத்துடன் இணைந்து வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டு மின்சாரம் பெற்ற 52 பேர் வடமராட்சியில் கைது

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு குடத்தனை, மணற்காடு பிரதேசங்களில் திருட்டு மின்சாரப்பாவனையில் ஈடுபட்ட 52 பேர் இலங்கை மின்சாரசபையின் உயர் அதிகாரிகள் அடங்கிய திடீர் பரிசோதனைக் குழுவிடம் வசமாக அகப்பட்டுக் கொண்டதுடன் அவர்களை அவ்வதிகாரிகள் உடனடியாகக் கைதுசெய்துள்ளனர். மேலும் இவர்கள் திருட்டு மின்சாரத்திற்கு பயன்படுத்திய மின் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

இலங்கை மின்சாரசபையின் உயர் அதிகாரிகள் குழு கொழும்பிலிருந்து யாழ்.வருகைதந்துள்ளநிலையில் இவர்கள் பருத்தித்துறை பொலிஸாருடன் இணைந்து வடமராட்சிப் பகுதியில் திருட்டுமின்சார நடவடிக்கைகள் குறித்து பரிசோதனையில் ஈடுபட்டபோதே இவர்கள் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான திருட்டு மின்சார நடவடிக்கையால் தாம் சீரானமின்விநியோகத்தை பெறமுடியாதுள்ளதாக அப்பகுதிமக்கள்தெரிவிக்கின்றனர்.(01)

# பலமான எதிர்க்கட்சி; இதுவே எனது இலக்கு

## - கூறுகின்றார் பொன்சேகா

பலமான பொது எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதே தமது ஒரே இலக்கு என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் தலைமைத்துவத்துக்கான போட்டிகளும், ஏனைய தனிப்பட்ட பிரச்சினைகளும் காணப்படும் வரையில், அரசாங்கம் அதில் இருந்து நன்மையை பெற்றுக் கொள்ளும்.

எனவே பதவி மற்றும் தனிப்பட்ட சிக்கல்களை புறம்தள்ளிவிட்டு, பொது எதிர்க்கட்சி ஒன்றுக்காகவும், மக்களின் நன்மைக்காகவும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

தமக்கு பதவியோ, அதிகாரமே தேவையில்லை என தெரிவித்த அவர், அவ்வாறான அதிகாரங்கள் தமக்கு இருந்த போதும், அதனை உதைத்து தள்ளிவிட்டே மக்கள் முன் வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



# அமைதிக்குத் திரும்புதல் அல்லது அமைதியை உருவாக்குதல்

- கருணாகரன்

இன்றைய உலகத்தின் பொது உரையாடல் அல்லது பொது உரையாடலுக்கான அழைப்பு அல்லது பொதுச் சிந்தனையைக் கோருதல் என்பதெல்லாம் அமைதியைக் குறித்ததாகவே அமைகின்றன. அதாவது அமைதிக்குத் திரும்புதல் அல்லது அமைதியை உருவாக்குதல் என்பதை நோக்கியதே இது. எல்லா வழிகளும் எல்லா வழிமுறைகளும் இறுதி இலக்கில் அமைதிக்கானவையே என்பது இதன் அர்த்தம். அமைதியற்ற நிலையில் உருவாக்கப்படும் எத்தகைய முன்னேற்றங்களும் நிலையற்றவை, பாதுகாப்பற்றவை என தெளிவாக உணரப்பட்டுள்ளதன் விளைவே இதுவாகும். ஆகவே, அமைதியின்மையின் மீது எதையும் எழுப்பிப் பிரயோசனமில்லை. எல்லாவற்றுக்கும் முதலில் அமைதியை உருவாக்க வேண்டும் என்று சிந்திக்கப்படுகிறது.

அமைதிக்கான அவா என்பது, இன்றைய உலகத்தில் 98 வீதத்திற்கும் அதிகமான மக்களிடம் உள்ளது.எல்லா மத பீடங்களும் அமைதிக்காகப் பிரார்த்தித்திருக்கின்றன. உலகிலுள்ள பெரும்பாலான ஊடகங்களும் அமைதியைக் குறித்தே எழுதுகின்றன, பேசுகின்றன. கட்சிகள், தலைவர்கள், அமைப்புகள் என அனைத்துத் தரப்புகளும் அமைதியை உருவாக்குவதற்காகவே தாம் உழைத்து வருவதாகச் சொல்வதைக் காண்கிறோம். அமைதிக்காகவே உலகெங்கும் ஏராளம் மன்றங்களும் அமைப்புகளும் உருவாகியுள்ளன. அமைதியை உருவாக்குவதற்காக அல்லது அமைதிக்குத் திரும்பிச் செல்வதற்காக பல வழிமுறைகள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இந்த வழிமுறைகளைப் பற்றிய விளக்கங்கள், பிரயோக நிலைக்குரிய ஏற்பாடுகள், திட்டமிடல்கள் என ஏராளம் ஏராளம் முயற்சிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவை ஒவ்வொன்றுக்குமாகத் தாராளமாக பணம் வாரியிறைக்கப்படுகிறது. அமைதி முயற்சியில் ஈடுபடுவோருக்கான அல்லது அமைதிக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகக் கூறும் அமைப்புகளுக்கான மதிப்பும் மரியாதையும் தாராளமாக வழங்கப்படுகிறது.

ஆனால், இவ்வாறு வழங்கப்படும் முன்னுரிமைக்கும் முயற்சியின் அளவுக்கும் அமைதி சாத்தியப்படவில்லை. அது இலகுவில் எட்ட முடியாத கனியாகவே உள்ளது. அமைதி என்பது ஒரு வானவில்லைப் போல அழகியதாகத் தோற்றம் காண்பிக்கிறதே தவிர, அது பூமியில் மலர்வதன் சாத்தியங்கள் மிகமிக அபூர்வமானது என்பதே பலருடைய அனுபவம். ஒலிவ் இலையைத் தன் அலகுகளில் ஏந்திய சமாதானப் புறாக்கூடக் களைப்படைந்து விட்டது. ஆகவே, அமைதிக்குத் திரும்புவது இலகுவானதல்ல. உலகமே இதையே சொல்கிறது. உலகத்தின் அனுபவமே இதுதான். சிங்களவர்களும் இதையே சொல்கிறார்கள். தமிழர்களும் இதையே கூறுகிறார்கள். கறுப்பர்கள், அரேபியர்கள் எல்லோருடைய அனுபவமும் இதுதான். எப்படி அமைதிக்குத் திரும்புவது என்றுதான் ஒருவருக்கும் புரியவில்லை.

அப்படியென்றால், அமைதிக்குத் திரும்புதல் என்பதன் அர்த்தம் என்ன? அமைதியை உருவாக்குதல் என்பதன் பொருள் என்ன? இன்றைய உலகத்தில் மிகக்கடினமான ஒரு பதம் இது. மிகக் கடினமான ஒரு செயல்முறையும் திட்டமும் கூட. எனவே புறக்கணிக்க முடியாதது. அவசியமான எதுவும் புறக்கணிக்க முடியாததே. எனவே, அமைதியை உருவாக்குவது, அமைதியை அடைவது என்ற இலக்கில் பயணிப்பது தவிர்க்க முடியாததாகிறது.

அவசியமான ஒன்றை, புறக்கணிக்க முடியாத ஒன்றை, உலகம் தழுவிய ஒன்றை நாமும் கண்டடைய வேண்டியுள்ளது, அதை நாமும் உருவாக்க வேண்டியிருக்கிறது. இலங்கையர்கள் ஒவ்வொருவருக்கும் முன்னுள்ள சவாலும் தேவையும் இதுவாகும். நீண்ட யுத்தத்தைச் சந்தித்தவர்கள் இலங்கையர்கள். முரண்களால் சிதைவுண்ட சமூகங்களாக இலங்கை மக்களும் அப்படியான சமூகங்களை உள்ளடக்கிய நாடாக இலங்கையும் உள்ளன. முரண்களை உள்ளடக்கியிருக்கும் சமூகங்கள் அவற்றைக்களையவில்லை எனில் பிரச்சினைகளால் துவண்டு விடும். முடிவற்ற பிரச்சினைகள் முன்னேற்றத்துக்குத்தடையானவை. அதேவேளை அவை பெரும் பாதிப்பையே ஏற்படுத்துவன. கடந்த காலத்தில் சிந்தப்பட்ட இரத்தமும் கண்ணீரும் இதைத் தெளிவாகவே சொல்லுகின்றன.இந்த இரத்தமும் கண்ணீருமே இன்று அமைதியையும் கோருகின்றன.

ஆகவே கடந்த காலத்தைச் சாட்சியப்படுத்திக்கொண்டு, அதைப் படிப்பினையாகக் கொண்டு, வாழ்வனுபவமாகக் கொண்டு, அமைதிக்காக ஒவ்வொருவரும் தங்களின் மனதில் முன்னகரும் அடிகளை முன்வைக்க வேண்டியுள்ளது. இதை இங்கேஉரைப்பதைப்போல மிக எளிதில் செய்துவிட முடியாதென்பதே மீண்டும் நாம் வலியுறுத்துவது. அமைதிக்கான வழி என்பது மிகமிகக் கடினமானது. இன்னும் சொல்லப்போனால் யுத்தத்தை நடத்துவது இலகுவானது, அமைதியைக் கண்டடைவதையும் விட, அதை உருவாக்குவதையும் விட.

யுத்தத்தில் வெற்றி தோல்வி என்ற இரண்டு பரிமாணங்களே உண்டு. ஆனால், அமைதி அத்தகையதல்லஅது பல்பரிமாணமுடையது.இந்தப் பல் பரிமாணமே அமைதியின் முழுமையாகும்.



யுத்தத்தில் முரண்களே அடிப்படை. அமைதியில் அல்லது சமாதானத்தில் இணக்கமே அடிப்படையானது. முரண்களை உருவாக்குவது மிக எளிது. ஆனால், முரண்களை அகற்றுவதும் இணக்கத்தை ஏற்படுத்துவதும் மிகக் கடினமானது. முரண்கள் வளர வளர யுத்தச் சூழல் தீவிரமடைந்து கனியும். அது மேலும் தீவிரமடையும்போது யுத்தம் உச்சகட்டத்தை எட்டும். அல்லது கொதிநிலைகொள்ளும். ஆனால், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு, அமைதி உருவாக்குவதற்கு முரண்நிலை அம்சங்கள் களையப்பட வேண்டும். அந்த இடத்தில் நம்பிக்கையும் புரிந்துணர்வும் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். இவ்வாறு கட்டியெழுப்பப்படும் நம்பிக்கையும் புரிந்துணர்வும் முரண்களால் உருவான காயங்களை ஆற்றும். பகைமையை மறக்க வைக்கும்.பகைமையை மறக்கடிக்காத வரையில் காயங்களை மாற்ற முடியாது. காயங்கள் மாறாத வரையில் அது உண்டாக்கிய வலிகளும் அவற்றின் நினைவுகளும் மாறாது. காயங்களும் வலிகளும் அவற்றின் நினைவுகளும் முரண்களையே வளர்க்கும். அல்லது முரண்களை வளர்க்கும் சக்திகளுக்கு வாய்ப்பளிக்கும்.

இலங்கையில் நடந்து கொண்டிருப்பது காயங்களைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சிகளே. யுத்தத்துக்குப் பின்னர் அமைதிச் சூழல் தோன்றி விட்டது என்று சனங்கள் கருதினாலும் சரி, அல்லது அவர்களை அப்படி நம்ப வைத்தாலும் சரி, உண்மையில் சனங்கள் உண்மைக்கு அப்பால், அமைதிக்கு வெகு தொலைவில், முரண்களின் மத்தியிலேயே நிறுத்தப்பட்டுள்ளனர். இது அபாயங்களின் மத்தியில், அவர்களைக் குடியிருத்தியிருப்பதற்குச் சமனாகும். சனங்களைச் சுற்றி மீண்டும் அபாய வலைகள் பின்னப்படுகின்றன. அவர்களுடைய நாளாந்தச் செயற்பாடுகளில் இருந்து, மத - கலாச்சார விசயங்கள், வாழிடங்கள், நம்பிக்கைகள் அனைத்துமே முரண்களுக்குள் இட்டுச் செல்லப்படுகின்றன. தினமும் நம்பிக்கையீனமான - அபாயமூட்டும் செய்திகளையே அவர்கள் அறிகிறார்கள். அரசியல் அரங்கில் நகர்த்தப்படும் காய்கள் அமைதிப் பிராந்தியத்திலிருந்து ஒவ்வொருவரையும் வெளியகற்றிக் கொண்டேயிருக்கின்றன. பெரும்பாலான அரசியல்வாதிகள் மனங்களில் தீயையும் விசத்தையும் கத்தியையும் ஏந்திக் கொண்டேயிருக்கிறார்கள். ஏன் ஊடகங்களிற் பலவும் கூட இப்படித்தான் உள்ளன. பெரும்பாலான ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் எல்லோரும் நடு நிலையைத் தவறிக் கொண்டிருக்கின்றனர். அதாவது அமைதிக்கு மறுதிசையில்சென்று கொண்டிருக்கின்றனர். இது எங்கே கொண்டு நிறுத்தும் என்பதை யாரும் அறியாததல்ல.

யுத்தத்தத்திலிருந்த மீண்ட நாடு என்ற அடையாளங்களும் யுத்தத்திலிருந்து தப்பிய மக்கள் எனும் அனுபவங்களும் இங்கே கேலிக்குரியனவாகி விட்டன. மறக்கடிக்கப்பட்டு வருகின்றன. யுத்தத்தின் சுவையை உலக மக்கள் உணர்ந்த விதத்திற்கும் இலங்கையர்கள் உணர்ந்த விதத்திற்கும் இடையே வேறுபாடுகள் அதிகம். குறிப்பாக இரண்டாம் உலகப்போரில் மோதுண்ட சமூகங்களும் நாடுகளும் அதற்குப் பின்னர் இணக்கப் புள்ளிகளை நோக்கி நகரத் தொடங்கின. தென்னாபிரிக்காவில் இறுக்கமான மனதோடும் கடினமான நடைமுறைகளோடும் இருந்த வெள்ளையர்களும் கறுப்பர்களும் இணக்கப் புள்ளிகளை நோக்கி நகர்ந்திருக்கின்றனர். வரலாற்றின் வழிநெடுகலும் முரண்களோடு பயணித்த இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் முரண்களைக் களைந்து விட்டனர். அல்லது முரண் உருவாக்கங்களைத் தவிர்த்து வருகின்றனர். இல்லையெனில் சிலுவை யுத்தங்களும் புனிதப் போர்களும் இன்னும் முடிவுக்கு வந்திராது.

ஆகவே இணக்கப் புள்ளிகளைக் களைய வேண்டியுள்ளது. ஆனால் அது எளிதானதல்ல. சமாதானத்துக்கும் அமைதிக்கும் எப்போதுமிருப்பவை எதிர்நிலைகள். இந்த எதிர்நிலைகள் மாற்றுச் சிந்தனையாளர்களையும் யதார்த்தவாதிகளையும் அமைதியைக் குறித்து விசுவாசமாகச் சிந்திப்போரையும் அங்கீகரிப்பதில்லை.சாத்தியமான விசயங்களைக் குறித்துச் சிந்திப்போர், மாற்று உபாயங்களை முன்மொழிவோர், எப்போதும் எதிர்நிலைச் சக்திகளால் எதிராளிகளாகவே அடையாளப்படுத்தப்படு கின்றனர். அல்லது பெறுமதியற்றோர் ஆக்கப்படுகின்றனர். இன்று இலங்கை அரசுக்குள் இருந்து அமைதியைப் பற்றிச் சிந்திக்கும் முற்போக்காளர்கள் கூட அரசாங்கத்திற்குள் இருக்கும் எதிர்நிலைகளால் அவ்வாறுதான் நோக்கப்படுகிறார்கள். அரசுக்கு வெளியேயும் இதுதான் நிலைமை. ஊடகங்களிற்கூட இத்தகைய நோக்கு நிலைதான் உண்டு.

எனவே, இந்த அமைதியைச் சாத்தியப்படுத்திகளை இவை முழுமூச்சுடன் எதிர்க்கின்றன.

அப்படியானால் எதிர்நிலைகளைக் கையாள்வது எவ்வாறு?

கடினமான எதுவும் உரிய பொறிமுறைகளின் மூலமே இலகுவாக்கப்படுகின்றது.எனில், இதற்குரிய பொறிமுறையும் உருவாக்கப்பட வேண்டும். அந்தப்பொறிமுறையை இயக்க முற வைக்கவும் வேண்டும். இதற்குச் சிறந்த, ஆளுமை மிக்க, விசுவாசமும் உண்மை உணர்வும் நிரம்பிய மனிதர்களின் சேர்க்கை தேவை. இந்தச் சேர்க்கையில் நிகழும் உரையாடல் தேவை. இந்த உரையாடலை அலைகளாக்கும் விதங்கள் தேவை. இவை உண்டாக்கும் விளைச்சலே அமைதிக்கு நிரந்தரமாகத் திரும்ப வைக்கும். அல்லது அமைதியை உருவாக்கும்.


இங்கே அமைதிக்குத் திரும்புவதற்கான ஒரே வழி பகை மறப்பும் நல்லிணக்கமுந்தான். ஆன்ால், அது இன்றைய இலங்கை அரசாங்கம் கூறும் வகையில் அல்ல. அது அர்த்தப்படுத்தும் விதமாகவும் அல்ல. அதற்கப்பால், அது உணரவே முடியாத உண்மை வெளியில் - சனங்களின் மத்தியில், அவர்களுடைய விருப்பங்களின் மையத்தில் உள்ளது. இதைக்குறித்துச் சிந்திப்போர் யார் என்பதே இன்றைய கேள்வி. இந்தக் கேள்வியே அமைதிக்குத் திரும்புதல் அல்லது அமைதியை உருவாக்குதல் எப்படி என்பதிலும் உள்ளது.

**கடந்த காலத்தைச் சாட்சியப்படுத்திக்கொண்டு, அதைப் படிப்பினையாகக் கொண்டு, வாழ்வனுபவமாகக் கொண்டு, அமைதிக்காக ஒவ்வொருவரும் தங்களின் மனதில் முன்னகரும் அடிகளை முன்வைக்க வேண்டியுள்ளது. அமைதிக்கான வழி என்பது மிகமிகக் கடினமானது. இன்னும் சொல்லப்போனால் யுத்தத்தை நடத்துவது இலகுவானது, அமைதியைக் கண்டடைவதையும் விட, அதை உருவாக்குவதையும் விட.**

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூன்று கட்டங்களாக அமுலாகும்

## அமெரிக்காவிடம் இலங்கை வாக்குறுதி





(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு இலங்கை அரசு உறுதியளித்துள்ளதாக தகவல்கள் தற்போது கசிந்துள்ளன.

அண்மையில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர், அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் கிலாரிகிளிண்டனிடம் இந்த உறுதிமொழி அடங்கிய ஆவணத்தை சமர்ப்பித்துள்ளனர்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பதனை அடிப்படையாகக் கொண்ட இரண்டு பக்க அறிக்கை இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஆராய ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் பரிந்துரைகள அமுல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தெந்த அமைச்சுக்களின் ஊடாக திட்டங்கள் அமுல்படுத்தப்படும் போன்ற விபரங்கள் ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆவணம் மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுளளதாக கிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அமெரிக்காவிடம் எந்தவொரு ஆவணமும் கையளிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சரும் ஆளும் கட்சியினரும் திட்டவட்டமாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்த ஆவணத்தை பகிரங்கப் படுத்துமாறு கிளிண்டனிடம், அமைச்சர் பீரிஸ் கோரியதாக கடந்த மே மாதம் 19 ஆம் திகதி ஏ.எப்.பீ என்னும் சர்வதேச ஊடகம்வெளியிட்டிருந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரூபாவின் பெறுமதியை தூக்கி நிறுத்த அரசு பகீரதப் பிரயத்தனம்



(கொழும்பு)

இலங்கையில் கடந்த சில வாரங்களாக டொலருக்கு எதிரான ரூபா 135 என்ற பெறுமதியிலிருந்தது. ரூபாவின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள மேலும் 1000 மில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்த டொலர்களை பெற்றுக்கொள்வது செயற்கையான ஒரு செயற்திட்டமாகும். எனவே இதனை சிறந்த மாற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது.

தாம் பெற்ற கடன்களை ஒரே தடவையில் திருப்பி செலுத்த வேண்டிய நிலைக்கு இலங்கை உட்பட்டுள்ளது.

எனவேதான் அதிகளவான டொலர்களை பெறவேண்டிய கட்டாயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது என்று ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் கடன் திருப்பிசெலுத்தல் விடயத்தில் ஹொங்கொங் சங்காய் வங்கிக்கு மாத்திரம் 500 மில்லியன் டொலர்களை எதிர்வரும் ஒக்ரோபர் 22 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மேலும் கடன்தொகையை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

# கடன் பெறுவதில் அதிகரிக்கிறது ஆர்வம்



(கொழும்பு)

இலங்கையர்கள் பல்வேறு நிதி நிறுவனங்களிலும் இருந்து கடன் பெறும் வீதம் அதிகரித்துள்ளதாக இலங்கையின் கடன் தகவல் மையம் அறிவித்துள்ளது.

இந்தக் கடன்கள் இலங்கையில் உள்ள 92 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. இந்தக் கடன்களின் தொகை 5 பில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடன்கோரி சுமார் 10 ஆயிரம் விண்ணப்பங்கள் தற்போது நிதிநிறுவனங்களுக்கு கிடைத்துள்ளன. எனினும் அதில் கடனைத் திருப்பி செலுத்தமுடியாதவர்கள் என்ற அடிப்படையில் பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுளளதாக கடன் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

# மதுரை - கொழும்பு விமான சேவையை விரைவில் ஆரம்பிக்க முயற்சி

(கொழும்பு)

மதுரைக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவையை தொடங்குவது தொடர்பில் விமானசேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவிடம் மதுரை சுற்றுலா கழக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த மதுரை சுற்றுலாக் கழகத் தலைவர் பி.எஸ்.ஜி. முஸ்தபா தலைமையிலான குழுவினர் அமைச்சர் பிரியங்கார ஜயரத்னவை சந்தித்து பேசியபோது, அவரிடம் கொழும்பு- மதுரை இடையேயான விமானப் போக்குவரத்தை தொடங்குவது தொடர்பான மனுவைக் கையளித்தனர்.

பின்னர் அவர்கள் இலங்கை வணிகதுறை தலைவர் ரோகன பெரேரா மற்றும் மிகின் லங்கா அதிகாரிகளையும் சந்தித்தனர். முடிவில் மிகின் லங்கா விமானம் தனது சேவையை எதிர்வரும் குளிர்கால பட்டியலில் அதாவது செப்ரெம்பர் மாதம் தங்களது சேவையை தொடங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மதுரை - கொழும்பு இடையே விமானப் போக்குவரத்து தொடங்கப்படுவதன் மூலம் சுற்றுலாத் துறை வளர்ச்சி அடையும். தென் தமிழகத்தில் இருந்து ஏராளமானோர் இலங்கை வருவதால் வருவாய் கிடைப்பதுடன் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மதுரையிலிருந்து இலங்கை வந்தவர்களில், மதுரை சுற்றுலாக் கழகத்தின் முன்னாள் தலைவர்கள் டாக்டர் ஜி.வாசுதேவன், என்.ஸ்ரீராம், செயலாளர் எஸ்.செந்தில்நாதன், உறுப்பினர் எஸ்.ராசகோபாலன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

# பொருளாதார விவகாரங்களுக்கான விசேட பேரவை அமைக்க முடிவு



(கொழும்பு)

நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவிற்கும், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உக்கிரமான மோதல் நிலைமைகள் காரணமாக பொருளாதாரம் தொடர்பாக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக பொருளாதார விவகாரம் தொடர்பான பேரவை ஒன்றை ஏற்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்பட உள்ள இந்தப் பேரவையில், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அங்கம் வகிக்க உள்ளனர்.

பி.பி.ஜயசுந்தரவிற்கும், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பனிப்போர் உக்கிரமடைந்துள்ளதால், பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# ஆளுமைமிக்க எதிர்க்கட்சித் தலைவரே எமது நாட்டுக்குத் தேவை



## சஜித் எதை எதிர்பார்க்கிறார்?

(கொழும்பு)

நாட்டில் ஆளுமைமிக்க சிறந்த எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் அவசியம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிததுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதனை ஐக்கிய தேசியக் கட்சி நிர்ணயிக்க வேண்டியது முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும் தனிப்பட்ட நபர்கள் இது தொடர்பில் தீர்மானிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் நிகழ்வு ஒன்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் பங்கேற்றால் அதன் மூலம் அவர் பொன்சேகாவுடன் இணைந்துகொண்டார் என அர்த்தப்படாது எனறும் அவர் காட்டியுள்ளார்.

# வெட்டுப்புள்ளி வழக்கு இறுதித் தீர்ப்பு இன்று



(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதார உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளி தொடர்பான வழககின் தீர்ப்பு அநேகமாக இன்று அறிவிககப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது இந்த வழக்கின் தீர்ப்பு இரண்டரை இலட்சம் மாணவ மாணவியரின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இசட் புள்ளி வெளியீட்டின்போது மாணவர்களுக்கு அநீதி இழைககப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிவதற்கு நிபுணர் குழுவொன்றை நியமிக்குமாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க விடுத்த கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களின் அடிப்படையில் மாணவ மாணவியர் கடந்த தடவை பரீட்சைக்காக தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைப் பெறுபேறு மற்றும் இசட் புள்ளி ஆகியன தொடர்பில் பாரியளவு சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இந்த சர்ச்சை தொடர்பில் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் உயர்நீதிமன்றில் வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கின் தீர்ப்பைத் தொடர்ந்து பரீட்சை விடைத்தாள மீளாய்வு தொடர்பான தகவல்களை வெளியீடு செய்யவும் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# கொழும்பில் போதை வர்த்தகத்தை துடைத்து ஒழிக்க நடவடிக்கை

## களத்தில் குதிக்கிறது படையணி

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்த உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸார் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு உதவியாக இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து மாத்திரம் கடந்த மாதம் 200 கிராமுக்கும் மேற்பட்ட தொகையில் ஹெரோயின் போதைப்பொருள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பு - கிராண்ட்பாஸில் போதைப் பொருளுடன் நான்கு பேர் இராணுவத்தினரிடம் சிக்கியதுடன், கண்டி நகரில் ஒருவர் சிக்கியதாகவும் இவர்களைக் கைதுசெய்த இராணுவத்தினர், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் வணிகசூரிய குறிப்பிடடுள்ளார்.

# குடும்ப வன்முறை முறைப்பாடுகள் இவ்வருடத்தில் குறைந்துள்ளன

## – வல்வெட்டித்துறை பொலிஸார் –

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போது குடும்ப வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் படிப்படியாக குறைந்து வருவதாக வல்வெட்டித்துறை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

கடந்த வருடம் 119 பேர் குடும்ப வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். இவர்களில் 3 பேருக்கு குடும்ப வன்முறையின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

மேலும் 9 பேர் குடும்பப் பிரச்சினைக்கான முறைப்பாடுகளை பதிவு செய்த நிலையில், தம்முடனான சமரச முயற்சியினால் முறைப்பாடுகளையும் விசாரணைகளையும் இரத்துச் செய்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வருடத்துடன் இவ்வருட அரையாண்டு காலப்பகுதியை ஒப்பிடுகையில் குறைந்தளவிலான முறைப்படுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடம் 51 பேர் குடும்ப வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்துள்ள நிலையில், 5 பேருக்கு குடும்ப வன்முறையின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் எதுவும் இடம்பெறவில்லை என குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான குடும்ப வன்முறைகளுக்கு மதுபாவனையே முக்கிய காரணியாக காணப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன சட்ட நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை கடந்த 2011 மற்றும் இவ்வருடத்தில் மது போதையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக மது பாவனையாளர்கள் பலர் எச்சரித்து விடப்படுவதுடன், மீறியவர்களுக்கு நீதிமன்றத்தால் மதுபோதை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (116)



மாகாண மட்ட கணித நாடகப் போட்டியில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்ற காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி அதிபருடன் நிற்பதை காணலாம். (10)

# அதிர்ஷ்ட லாபச்சீட்டு வெற்றிபெற்றோர் விபரம்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுக்காக விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் அண்மையில் குலுக்கப்பட்டது.

இதில் முதலாம் பரிசினை தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த க.கருணாலட்சுமி, 2 ஆம் பரிசை கடுகம்பன் புலோலி மேற்கைச் சேர்ந்த தமிழ் வேந்தன், 3 ஆம் பரிசை எவஸ்ரினா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (104)

# அந்திரான் கிராம மக்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட அந்திரான் ஜே/157 கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு நிறைவேற்ற வேண்டியுள்ள அவசர திட்டங்கள் தொடர்பான மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அந்திரான் கிராமத்தின் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இக்கிராம மக்களுக்கான புதிய வீட்டுத்திட்டம், திருத்த வேலை வீட்டுத்திட்டம், புதிய மலசல கூடத்திட்டம், திருத்த வேலை மலசலகூடத் திட்டம் மற்றும் காணி பெயர் மாற்றம், சோலை வரி போன்ற செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளன.

இதற்கு வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் காணி பெயர் மாற்றம் மற்றும் சோலைவரி ஆகியவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

எனவே இக் கிராம மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்குவதுடன் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு ஜனசக்தி சனசமூக நிலைய செயலாளர் அறிவித்துள்ளார்.


# வாள் வெட்டில் குடும்பஸ்தர் காயம்

(வடமராட்சி)

வாள்வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன் கிழமை ஆழியவளை - கொக்குளாய்ப் பகுதியில் உள்ள தனது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்த சாரதியான தி.அருள்வண்ணம் (வயது - 33) என்பவர் மீது இளைஞர் குழு ஒன்று இவ்வாறு வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (116)

# பரமர் சங்கமம்



'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நோக்குடன் செயற்படுகின்ற தொழில் ஒன்றுண்டென்றால் அது நூற்றுக்கு நூறு ஊடகத் தொழிலென்றே கூறிவிடலாம்.

நாட்டின் பல பாகங்களிலும் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை ஒரு சேர உலக மக்கள் அறிந்து கொள்ளும்படியாக அந்தந்த இடங்களில் பிரசன்னமாகித் தகவல்களைச் சேகரித்து வழங்குகின்ற பணி அது.

யுத்த களமாக இருக்கலாம், அரசியல் குத்து வெட்டுகளாக இருக்கலாம். சூடு பறக்கும் பாராளுமன்ற விவாதங்களாக இருக்கலாம் அவற்றை துணிச்சலுடன் முகம் கொடுத்து புகைப்படங்களை எடுத்தோ, தகவல்களைக் கேட்டறிந்தோ வழங்க வேண்டிய கடப்பாடு ஊடகவியலாளனுக்கு உண்டு.

அந்நேரங்களில் தாக்குதல்களுக்கு உள்ளாகியோ, புகைப்படக் கருவிகள் சேதப்படுத்தப்பட்டோ, கொல்லப் படவுமோ கூடிய நிலைமைகளுக்கு மத்தியில் தன்னுடைய பணியை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குள்ளாக்கப்படுகின்றான்.

இவ்வேளைகளில் பயந்தோ, பின்வாங்கியோ விட்டால் அந்தத் தொழிலைச் செய்கின்ற ஆற்றல் அற்றே விடுகிறது. அல்லாமலும் ஒரு சில தகவல்களை மறைக்கும்படி பேரம் பேசப்படுவதையும் மீறி அந்தத் தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்தால் மர்மமான முறையில் உயிர்ப்பலிக்கு உள்ளாகவும் நேர்கிறது.

உண்மைத் தகவல்களை மக்கள் அறியச் செய்ய வேண்டியது தான் உண்மையான ஊடகப் பணி என்றும், ஊடக தர்மம் பக்கச் சார்பாக இருக்கக் கூடாதென்றும் எதிர்பார்க்கும், வலியுறுத்தும் சமூகம் அவர்களைப் பற்றி உண்மைகளை எழுதும் போது ஜீரணித்துக் கொள்ள முடியாமல் பழி தீர்க்க முயல்கின்றது.

இத்தகைய சூழ்நிலையிலேயே ஊடகவியலாளனின் எழுதுகோல் செயல் பட வேண்டியுள்ளது. அதனால் அவனுக்குத் தற்துணிவும், இலட்சியப் பிடிப்பும் ஏன் ஒரு விதமான சண்டித்தனமும் கூட தேவைப்படுகின்றது.

தாதாக்கள், துப்பாக்கி, வாள் போன்ற கொலைக் கருவிகளுடன் வீதிக்கு வந்து சண்டித்தனம் செய்வது போன்றே ஊடகவியலாளன் புகைப்படக் கருவி, பேனா போன்ற தார்மீக ஆயுதங்களுடன் தெருவில் இறங்குகிறான்.

சர்க்கஸ் காட்டுபவனுக்குக் 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போல் எம் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் தார்மீகப் பணியில் ஈடுபடு கின்ற ஊடகவியலாளனின் விதியும் சறுக்கலுக்கு உள்ளாவதென்னவோ உண்மைதான்.

என்றாலும் எங்கெங்கோ நடைபெற்று முடிகின்ற காரியங்களை உடனுக்குடன் எமக்கு விருந்தாக்கும் ஊடகப் பணியிலும் எத்தனை சுழிவு நெளிவுகளைக் கண்டு பயங்கரங்களுக்குள்ளால் வாழ்ந்து போக வேண்டியிருக்கும் இல்லையே சொல்லுங்க பாப்பம்...

# நடனப் போட்டி

(பருத்தித்துறை)

சமத்தலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் செம்பு நடனம், தனி நடனம் என்ற பிரிவில் போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், மாணவிகள் மட்டுமே பங்கு பற்ற முடியும்.

இதன்படி வடமராட்சி வலயத்தில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் நேரடியாக வடமராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல்வாரத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (109)

# மூத்த விநாயகருக்கு இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ மூத்த விநாயகர ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை 7.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று தொடர்ந்து விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிக்கும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(25.06.2012 – திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 11 ஆம் திகதி ஷஷ்டி முன் இரவு 8.33 வரை.
நட்சத்திரம் பூரம். சித்தயோகம். பின்இரவு 4.17 வரை.
குமார ஷஷ்டி விரதம். இரவு நடேசர் அபிஷேகம்.
இராகுகாலம் 7.25 - 8.55 வரை. சுபநேரம் 11.55 - 1.25 வரை.
எமகண்டம் 10.25 - 11.55 வரை. குளிகைகாலம் 1.25- 2.55 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்ப சுகம், உடல்நலக்குறைவு, அரச காரியங்களில் கவனம், இருப்பிடத்தில் போட்டி. |
| ரிஷபம் | சுகவிருத்தி, அதிகரித்த செலவு, சேமிப்பில் வீழ்ச்சி, மனஸ்தாபம். |
| மிதுனம் | பெரியோர் ஆதரவு, தன்னம்பிக்கை, பணப் பரிமாற்றத்தில் திருப்தி, குடும்ப சந்தோஷம். |
| கடகம் | வெற்றிகள், கஷ்டங்கள் நீங்கும், தொழில் துறையில் பிழப்பு, பெற்றோரால் உதவிகள். |
| சிம்மம் | அதிகாரிகள் உதவி, நீண்டகால ஆசைகள் நிறைவேறும், நினைத்தது நடக்கும். |
| கன்னி | பாசஈர்ப்பு, தொழில் துறையில் சாதனை, பிரயாணத்தில் உற்சாகம், தெய்வவழிபாடு. |
| துலாம் | அதிகாரிகள் ஒத்துழைப்பு, உத்தியோக உயர்வு, முன்னெச்சரிக்கை நன்று, நிதானம் தேவை. |
| விருச்சிகம் | குடும்ப சுகம், வியாபாரத்தில் போட்டி, அன்னியர் குறுக்கீடு, அமைதியின்மை. |
| தனுசு | இலாபதினம், குடும்பத்தில் நற்பெயர், தேக ஆரோக்கியம், கடன்கள் வசூலாகும். |
| மகரம் | முன்தினம் போல் முயற்சி தவிர்க்கவும், குடும்ப உறவு மேம்படும், உறவினர் வருகை. |
| கும்பம் | சமூகத்தில் நாட்டம், மதிப்பு உயரும், நினைத்த காரியம் தடைப்படும், கண்டிப்பைத் தவிர்க்கவும். |
| மீனம் | மனதில் குழப்பம், மனைவி வழியில் உதவி, எதிலும் அவசரம் கூடாது, செலவில் கவனம். |




# கொக்கோகோலா கிரிக்கெட் பயிற்சி முகாம் நிறைவு

(யாழ்ப்பாணம்)

கொக்கோகோலா நிறுவனமும், அரவிந்த டி சில்வா அற நிதியத்தினரும் இணைந்து நடாத்திய மூன்று நாள் கிரிக்கெட் பயிற்சி முகாம் நேற்று நிறைவுற்றது.

வடமாகாண வீரர்களை இனங்காணும் மூன்று நாள் கிரிக்கெட் பயிற்சி முகாம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் உட்பட மத்திய மாகாணத்தைச் சேர்ந்தோரும் பங்கு கொண்டனர். தேசிய ரீதியில் மூன்றாவது பயிற்சி முகாமாக இடம்பெற்ற இக்கிரிக்கெட் பயிற்சி முகாமில் 72இற்கும் மேற்பட்ட இளம் வீரர்கள் பங்கு கொண்டனர்.

இவர்களுக்கான உடலை வலுவாக்கும் வகையில் உடற்பயிற்சி மற்றும் கிரிக்கெட் தொடர்பான நுட்பங்கள், குறிப்பாக, பந்து வீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் போன்ற பல பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் முடிவில் ஏழு வீரர்கள் இனங்காணப்பட்டு அடுத்த கட்ட பயிற்சிக்குத் தெரிவானார்கள். அத்துடன் ஏழு வீரர்களுள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்டோருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. இதில் யாழ். மாவட்டத்திலிருந்து துவாரகசீலன், மதுசாந், வவுனியா மாவட்டத்திலிருந்து தினேஷ், அநுராதபுரத்திலிருந்து ஆர். எப்.ஏ. ராஜபக்ஷ, விக்கிரம ஆராச்சி மற்றும் சகித சம்பத் ஆகியோர் முதல் ஏழு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.


இதில் 25 ஆயிரம் ரூபா பணப் பரிசை விக்கிரம ஆராச்சி, கே. மதுசாந், ஆர்.எம்.ஏ.ராஜபக்ஷ ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேற்படி மூன்று நாள் பயிற்சிகளை இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் அரவிந்த டிசில்லா, வடக்கு மாகாணகிரிக்கெட் பயிற்றுநர், யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர், இலங்கை தேசிய கிரிக்கெட்டின் 19 வயதுப் பிரிவு அணிக்கான பயிற்றுநர் உட்பட இலங்கை கிரிக்கெட் சபையைச்சேர்ந்த முன்னணி பயிற்றுநர்கள் பலர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். இறுதியில்நடைபெற்றசான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கொக்கோகோலா நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளர், சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (எஸ்.பி.,எஸ்)



படப்பிடிப்பு : சுமித்தி

## விம்பிள்டன் ரென்னிஸ் இன்று ஆரம்பம்




(லண்டன்)

பிரபல கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியான விம்பிள்டன், இன்றுகோலாகலமாகத் தொடங்குகிறது. ரென்னிஸ் போட்டிகளில் பாரம்பரியம் மிக்க மிகப் பெரிய போட்டியாக விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டி விளங்கி வருகிறது. இங்கிலாந்தின் லண்டன் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிதான் விம்பிள்டன். இங்கிலாந்து லான் ரென்னிஸ் மற்றும் குரோக்கெட் கிளப் சார்பில் 1877ஆம் ஆண்டில் இருந்து இந்தப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இந்த போட்டியில் சம்பியன் பட்டம் வெல்வதே ஒவ்வொரு ரென்னிஸ் வீரர், வீராங்கனையின் கனவு, இலட்சியமாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா), ரோஜர் பெடரர் (சுவிஸ்), ரபேல் நடால் (ஸ்பெயின்) ஆகியோரிடையே பட்டம் வெல்ல கடும் போட்டி நிலவுகிறது. மகளிர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் பெத்ரா குவித்தோவா (செக் குடியரசு), மரியா ஷரபோவா (ரஷ்யா), விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்), வீனஸ், செரீனா (அமெரிக்கா) ஆகியோர் வரிந்து கட்டுகின்றனர்.

இதேவேளை, இந்த ஆண்டு விம்பிள்டன் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றும் முழு முயற்சியைச் செய்வேன். அதற்கான தகுதி தற்போதும் என்னிடம் அதிகம் இருப்பதாகவே உணர்கின்றேன். இருப்பினும் கடும் சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்பது எனக்குத் தெரியும் என பெடரர் தெரிவித்தார்.

## அரையிறுதியில் ஸ்பெயின்




யூரோ கிண்ண கால்பந்தாட்ட போட்டித் தொடரின் மூன்றாவது காலிறுதிப் போட்டியில் ஸ்பெய்ன் அணி வெற்றிபெற்றுள்ளது. பிரான்ஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற இப்போட்டியில் ஸ்பெய்ன் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

டொன்பாஸ் எரினா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஓரளவு விட்டுக் கொடுக்காமல் ஆடிய போதிலும், ஸ்பெய்ன் அணி ஒருபடி அதிகமாகச் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

போட்டியின் 19ஆவது நிமிடத்திலேயே ஸ்பெய்ன் அணி சார்பாக அலொன்ஸோ கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க ஸ்பெய்ன் ஆரம்ப நேர ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்டது. முதற்பாதியில் மேலதிக கோல்கள் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் முதற்பாதி 1-0 என்ற கணக்கில் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆரம்பித்ததும் ஸ்பெய்ன் அணி தற்காப்பு ஆட்டத்தைக் கையாளாமல் தொடர்ந்தும் கோல்களைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தது. எனினும் கோல்கள் கிடைத்திருக்காத நிலையில் போட்டி 1-0 என்ற கணக்கில் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்டதால் போட்டியின் இறுதி நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி உதை வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய அலொன்ஸோ கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க ஸ்பெய்ன் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக 2 கோல்களை அடித்த அலொன்ஸோ தெரிவானார். இந்த வெற்றியை அடுத்து ஸ்பெய்ன் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

## ஜேர்மனி அணி உலக சாதனை

தொடர்ச்சியாக 15 போட்டிகளில் வெற்றிபெற்று ஜேர்மனி அணி உலக சாதனை படைத்துள்ளது. யூரோ கிண்ண கால்பந்துப் போட்டித் தொடரின் காலிறுதியில் கிரீஸ் அணியை வீழ்த்தியே ஜேர்மனி அணி இச்சாதனையைப் படைத்துள்ளது.

கடந்த 2010 உலக கிண்ண கால்பந்துத் தொடரில் 3ஆவது இடத்துக்கான போட்டியில் ஜேர்மனி அணி, உருகுவேயை வென்றது. இதில் இருந்து வெற்றிநடையை தொடர்கிறது. இதற்கு முன் ஸ்பெயின், நெதர்லாந்து, பிரான்ஸ் அணிகள் தொடர்ந்து 14 வெற்றி பெற்றுள்ளன. இதேவேளை, கிரீசிற்கு எதிரான போட்டியில் நிறைய தவறுகள் செய்தோம். இதனால் தான் அவர்கள் 2 கோல் அடித்தனர். அரையிறுதியில் தவறு செய்ய மாட்டோம். முழுத்திறமை வெளிப்படுத்துவோம். எங்களை வீழ்த்துவது கடினம் என ஜேர்மனி அணித் தலைவர் தெரிவித்தார்.

## 11 இரவுகள் தூங்காமல் போட்டியை இரசித்தவர் மரணம்

(பீஜிங்)

தொடர்ந்து 11 இரவுகள் தூங்காமல் இருந்து யூரோ கோப்பை போட்டிகளைப் பார்த்த, சீனாவின் இளம் இரசிகர் மரணம் அடைந்தார்.

சீனாவைச் சேர்ந்தவர் ஜியாங் ஜியோசன், (வயது- 26). கல்லூரி நாட்களில் பல்கலைக்கழக, அணிக்காக கால்பந்து போட்டிகளில் பங்கேற்றுள்ள இவரது உடல் நிலை ஆரோக்கியமாகத் தான் இருந்தது. கடந்த 8ஆம் திகதி போலந்து, உக்ரைனில் தொடங்கிய யூரோ கோப்பை போட்டிகளை, அதிகாலை 5 மணி வரை விழித்திருந்து பார்த்துள்ளார். சரியாக தூங்காமல் மறுநாள் வேலைக்கு சென்றுள்ளார். தொடர்ந்து 11 நாட்களாக பார்த்த இவர், கடந்த 19ஆம் திகதி அயர்லாந்து, இத்தாலி அணிகள் மோதிய போட்டியை, நண்பர்களுடன் "பாரில்" "பீர்" குடித்துக் கொண்டே பார்த்தார். அதிகாலை 5 மணிக்கு மேல் வீட்டுக்கு தூங்கச் சென்ற இவர், எழுந்திருக்கவே இல்லை. தாயார் வந்து எழுப்பிய போது தான் ஜியாங் மரணம் அடைந்தது தெரிய வந்தது. மரணம் குறித்து டாக்டர் கூறுகையில், ஷஷசரியாக தூங்காதது, அதிகமாக மது குடித்தது போன்ற காரணங்களுடன் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு மற்றும் ரத்த ஓட்டத்தின் வேகம் குறைந்தது தான் மரணத்துக்கு காரணம் என்றார்.


## தோல்வியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது பாகிஸ்தான்





இலங்கை அணிக்கெதிரான காலி டெஸ்ட் போட்டியில் 510 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆடி-வரும் பாகிஸ்தான் அணி தோல்வியை நோக்கிப் பயணிக்கின்றது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்று வருகின்றது. ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணியால் இலங்கை அணியின் பந்துவீச்சைத் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியவில்லை. இறுதியில் பாகிஸ்தான் அணி அதன் முதல் இனிங்ஸிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 20, யுனிஸ்கான் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகல 2, ரங்கண ஹேரத் 3, ரண்டீவ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 372 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவதுஇனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் டில்சான் 56, பரணவிதன 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் 3, சயிட் அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 510 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி இலங்கை அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிவருவதுடன் விக்கெட்டுக்களை விரைவாகப் பறிகொடுத்து வருகின்றது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் நிறைவுக்கு வந்த வேளை, பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆட்டமிழந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 474 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இலங்கை முதல் இனிங்ஸ் 472.

# ஜே.பி.எல். ருவென்ரி – 20 மூன்றாமிடம் ஜொலிஸ்ரார்



(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் மூன்றாமிடத்தை ஜொலிஸ்ரார் அணி பிடித்துக் கொண்டது.

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். சென்றல் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றல் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி கார்த்திக்கின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்திக் இரண்டு சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மணிவண்ணன் 20, ஜெனர்த்தனன் 18, பிரியதர்சன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சலிஸ்ரன் மூன்று, விமலகாந், ரஜீவ் குமார் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 165 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி சுதர்சன், யசிந்தன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சிறப்பான அடித்தளத்தை இட்டபோதும்சைலோஸ்வரன் சஞ்சயன் ஆகியோரின் பந்துவீச்சு ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. இறுதியில் யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் ஐந்து சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களையும், யசிந்தன் 29 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த இணை 72 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. பந்து வீச்சில் சைலோஸ்வரன், சஞ்சயன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கார்த்திக் தெரிவானார். இதன் மூலம் மூன்றாமிடத்தை ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது. (எஸ்.பி., 42)

## கிருபானந்தன் சாதனை

(ஆனைக்கோட்டை)

இடம்பெயர்ந்து லண்டனில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கிடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தலில் நவாலியூரைச் சேர்ந்த பொன்னுத்துரை கிருபானந்தன் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனான இவர் தடகளப் போட்டியில் யாழ். மாவட்டத்திலும், இலங்கை ரீதியாகவும் பல தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் இடம்பெற்ற தமிழர்களுக்கிடையிலான 3ஆவது விளையாட்டு விழாவில் மூன்று பதக்கங்களைப் பெற்று 2011ஆம் ஆண்டுக்கான விருதையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (104)

# நிறைவுக்கு வந்தது ஒப்பந்தப் பிரச்சினை

ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இருந்துவந்த பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும் என்று புதிய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு அவுஸ்ரேலிய வீரர்கள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தது. அத்துடன் அவுஸ்ரேலிய வீரர்கள், இங்கிலாந்து பயணத்தைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபடக்கூடும் என்று செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்கள் சங்கத்துக்கும் இடையே நடந்த ஒப்பந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. அடுத்த 5 ஆண்டுக்கான வீரர்கள் ஒப்பந்தத்தில் திறமைக்கு ஏற்ப ஊதியம் என்பது கைவிடப்பட்டு, பழைய முறைப்படியே வருவாயில் குறிப்பிட்ட சதவீதத்தை ஊதியமாகவும், ஒவ்வொரு வெற்றிக்கும் அதனைப் படிப்படியாக அதிகப்படுத்தி அதிகபட்சமாக 27 சதவீதம் வழங்க கிரிக்கெட் சபை ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் ஒப்பந்த வீரர்களின் எண்ணிக்கை 25இல் இருந்து 17 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ருவென்ரி-20 கப்டன் ஜார்ஜ் பெய்லி, டெஸ்ட் எட்கோவன் ஆகியோருக்கு ஒப்பந்தப் பட்டியலில் இடம் கிடைக்கவில்லை. அதேசமயம் ஒருநாள் போட்டியில் விலகிய ரிக்கி பொண்டிங் தொடர்ந்து ஒப்பந்தத்தில் நீடிக்கிறார்.

# ஆசிரியர், மாணவர்களுக்கான ரக்பி பயிற்சி முகாம்



(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையக மக்கள் தொடர்பு அலுவலகம் ஆகியன இணைந்து பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ரக்பி தொடர்பான பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியிருந்தது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 14, 15ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்த ரக்பி விளையாட்டு தொடர்பான பயிற்சி முகாமில் யாழ். முன்னணிப் பாடசாலைகளிலிருந்து 120 மாணவர்கள் மற்றும் 25ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மற்றுமொரு ரக்பி பயிற்சி முகாம் ஒன்று ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் மைதானத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (சி)





**பருத்தித்துறைக் கோட்ட முன்பள்ளிகளின் மழலைகளுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த 17ஆம் திகதி புலோலி குரும்பைகட்டி முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. பருத்தித்துறைக் கோட்டத்திலுள்ள 62 முன்பள்ளிகளைச் சேர்ந்த 7 கொத்தணிகள் இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டன. சிறார்களின் விளையாட்டு நிகழ்வு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் பெற்றோர், கிராம அலுவலர் எனப் பலர் கலந்துகொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தினர். இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், சிறார்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் காணலாம்.**

# கிளிநொச்சியில் மாகாண மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டி அடுத்த மாதப் பிற்பகுதியில் கிளிநொச்சியில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை தெரிவித்தார்.

இது தொடர்பான விசேட கூட்டமொன்று அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றதாகவும், இம்மெய்வல்லுநர் போட்டி அடுத்த மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவான வீர, வீராங்கனைகள் பங்குகொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)

# செய்தி சாம்ராஜ்யத்தின் மன்னன்



– ஜெய்சக்திவேல் –

பி.பி.சிக்கு இந்த ஆண்டுடன் 80 ஆண்டுகள் நிறைவடைகிறது. இன்று நேற்றல்ல, நமக்கு செய்தி என்றவுடன் முதலில் நினைவுக்கு வரும் ஊடகம் பி.பி.சி. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஒரு காலத்தில் சர்வதேச ஊடகங்கள் செய்தியின் நம்பகத்தன்மையை அறிந்துகொள்ள பி.பி.சி உலகச் சேவையின் செய்திகளையே செவிமடுக்கும்.

பி.பி.சி.யின் நம்பகத்தன்மைக்குக் காரணம் அவர்களின் செய்தி வழங்கும் உத்தி எனலாம். மற்ற ஊடகங்களில் இருந்து பி.பி.சி முற்றிலும் மாறுபட இதுவே காரணமாகிறது. உலகின் முன்னணி வானொலிகளான "வொய்ஸ் ஒப் அமெரிக்கா", "வொய்ஸ் ஒப் ரஷ்யா" மற்றும் "வொய்ஸ் ஒப் ஜேர்மனி" ஆகிய




வானொலிகள் சம பலத்துடன் ஒலிபரப்பி வந்தாலும், பி.பி.சி.யின் தனித்துவத்திற்குக் காரணம் அதன் சுதந்திரம்.

மத்திய லண்டனில் கிங்ஸ்வே பகுதியில் அமைந்துள்ள புஷ் ஹவுஸில் இருந்து இதுநாள் வரையில் சேவை செய்துவந்த பி.பி.சி. உலகச் சேவை தனது 80ஆவது ஆண்டின் போது மீண்டும் தனது பழைய இடமான ப்ரோட்காஸ்டிங் ஹவுஸிற்குச் செல்கிறது.

இடம்தான் பழையதே தவிர, அங்கு அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் அனைத்தும் புதுமையானவை. ப்ரோட்காஸ்டிங் ஹவுஸில் இருந்து பி.பி.சி. வெளியேறியமைக்குக் காரணம் ஒரு குண்டுவெடிப்பு.

இன்றைய ப்ரோட்காஸ்டிங் ஹவுஸ"க்கு வெளியே 1940 டிசம்பரில் ஜேர்மன் நிலக்கண்ணி வெடித்து பெரும் தீ மூண்டது. பல மணிநேரம் தீ எரிந்ததால் கட்டடம் மிகவும் சேதமடைந்தது. இதனால் 1941 இல் புகழ் பெற்ற புஷ் ஹவுஸ"க்கு மாற்றம் அடைந்தது.

அன்று முதல் பி.பி.சி. உலகச் சேவையானது புஷ் ஹவுஸில் செயற்படத் தொடங்கியது. இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் யாதெனில், புஷ் ஹவுஸ் பி.பி.சி.க்குச் சொந்தமான கட்டடம் அல்ல. அது ஜப்பானிய நிறுவனமான கடொ கஹாகுவுக்குச் சொந்தமானது. இதுநாள் வரை இந்தக் கட்டடத்தை பி.பி.சி. குத்தகைக்கு எடுத்து ஒலிபரப்பிற்குப் பயன்படுத்தி வந்தது.

4 ஜூலை 1925 இல் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கட்டடம் முதலில் முக்கிய வர்த்தக மையமாகவே செயல்பட்டது. இந்தக் கட்டடம் 1929 இல் உலகின் மிக அதிக மதிப்புள்ள கட்டடமாக அறிவிக்கப்பட்டது. அன்றைய மதிப்பில் ஒரு கோடி அமெரிக்க டொலராக இருந்தது.

பி.பி.சி. உலகச் சேவையானது 1932 டிசம்பரில் சாம்ராஜ்ய சேவையாகத் தலைமை இயக்குநர் ஜோன் ரீத்தால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் சிற்றலையை ஒரு முக்கிய ஊடகமாக அனைத்து சர்வதேச வானொலிகளும் பயன்படுத்தி வந்தன. அதற்குக் காரணம் சிற்றலை ஒலிபரப்பின் மூலம் தொலைதூர நாடுகளையும் சென்றடையலாம்.

குறிப்பாக, பி.பி.சி தமிழோசை மற்றும் வெரித்தாஸ் வானொலிகள் வெளிநாடுகளில் உள்ள சிற்றலை ஒலிபரப்பிகளைப் பயன்படுத்தியே தமிழ் நேயர்களுக்கான வானொலி சேவையைச் செய்து வருகின்றன. இதுபோன்று இன்னும் பல வெளிநாட்டு வானொலிகள் தமிழில் இன்றும் சிற்றலை சேவையைச் செய்து வருகின்றன.

தொடக்ககால ஒலிபரப்பு சிறப்பாகவோ சுவாரஸ்யமாகவோ இருக்காது எனத் தலைமை இயக்குநர் ஜோன் ரீத் தனது உரையில் கூறினாலும், பிற்காலத்தில் பி.பி.சி. உலகச் சேவை மிகவும் புகழ்பெற்றது. ஒரே சமயத்தில் உலகின் அனைத்து கண்டங்களுக்கும் தனது சிற்றலை சேவையைச் செய்தது.

உலகச் சேவையின் ஒலிபரப்பு தொடங்கப்பட்டு ஆறு நாள்களில் புகழ்பெற்ற எழுத்தாளர் ருட்யார்ட் கிப்ளிங்கால் எழுதப்பட்ட கிறிஸ்மஸ் செய்தியை ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் உலகச் சேவை நேயர்களுக்கு வாசித்தார். அதில் அவர் "நான் எனது இல்லத்தில் இருந்து மட்டுமல்ல, உள்ளத்தில் இருந்தும் உங்களோடு பேசிக்கொண்டு இருக்கிறேன்" என்றார்.

உலகம் முழுவதும் உள்ள பி.பி.சி.யின் நேயர்கள் அரசரின் குரலை மிகத்தெளிவாகக் கேட்டது வரலாற்றினில் பதிவானது.

பி.பி.சி.யின் முதல் வெளிநாட்டுச் சேவையாக அரபிக் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் தென் அமெரிக்காவுக்கான ஸ்பானிய மொழி சேவை, ஜேர்மன், இத்தாலியன், பிரெஞ்ச், ஆபிரிக்கன், போர்த்துகீஸ் ஆகிய மொழி ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டன.

1940 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பி.பி.சி.யானது 34 மொழிகளில் ஒலிபரப்பத் தொடங்கியிருந்தது. அந்தக் காலகட்டத்தில் வொய்ஸ் ஒப் ரஷ்யா வானொலியை அடுத்து அதிக மொழிகளில் ஒலிபரப்பும் வானொலியாக பி.பி.சி. கடல்கடந்த சேவை இருந்தது.

ஒவ்வொரு நாளும் 78 செய்தி அறிக்கைகள் 2,50,000 வார்த்தைகளுக்கு மிகாமல் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டது. இதே காலகட்டத்தில் இந்தியாவிற்கான சேவை ஹிந்தி மொழியில் தொடங்கப்பட்டது. மேலும் ஐஸ்லாண்டிக், அல்பேனியன், பர்மீஸ் ஆகிய மொழிகளிலும் ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. இதே காலகட்டதில் பி.பி.சி. தமிழ் மொழியிலும் தனது சேவையை (3 மே 1941) தொடங்கியது.

தேம்ஸ் நதிக் கரையிருந்து தேடி-வரும் ஓசை, தேன் தமிழில் செய்திபல பாடிவரும் ஓசையான தமிழோசை முதலில் "செய்தி மடல்" என்ற பெயரிலேயே ஒலிபரப்பாகி வந்தது. தொடக்க காலத்தில் மூன்று நாட்களில் மட்டுமே ஒலிபரப்பப்பட்டது.

நேரடி ஒலிபரப்பு செய்த முதல் வெளிநாட்டு தமிழ் வானொலி என்ற பெருமையும் தமிழோசைக்கு உண்டு. 1983 இல் செயற்கைக்கோள் மூலம் இந்த நேரடி சேவை தொடங்கப்பட்டது. 1991 இல் தனது பொன்விழாவை தமிழோசை கொண்டாடியது. இந்த ஆண்டு முதல், வாரத்தின் அனைத்து நாள்களும் தனது சேவையைச் செய்யத் தொடங்கியது தமிழோசை.


பி.பி.சி. உலகச் சேவை தொடங்கப்பட்ட அடுத்த பத்து ஆண்டுகளில் தமிழோசையும் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இன்று 72 ஆண்டுகளைக் கடந்தும் தமிழோசையானது சிற்றலை மட்டுமல்லாமல் இணையம், கைபேசி என அனைத்து ஊடகங்களின் வழியாகவும் தனது சேவையைச் செய்து வருகிறது. இங்கிலாந்து மக்களின் வரிப் பணத்தில் செயல்பட்டு வரும் பி.பி.சி. தமிழோசை விரைவில் தனது 75 ஆண்டுகளைத் தொடவுள்ளது.

இன்று பத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு வானொலிகள் சிற்றலையில் ஒலிபரப்பி வந்தாலும், செய்தி சாம்ராஜ்யத்தின் மன்னனாக தொடர்ந்தும் பி.பி.சி. இருந்து வருகிறது.

# சினிமா சினிமா



ஹிந்தி நடிகர் ரன்தீப் ஹூடாவுடன் உங்களுக்கு காதலா என்று கேட்டால், சினிமா தவிர எனது தனிப்பட்ட விஷயங்கள் பற்றி பேச விரும்பவில்லை என்று மறுத்துவிடுகிறார் நீது சந்திரா. சினிமாவில் என் நடிப்பு மற்றும் அது தொடர்பான விஷயங்கள் மட்டுமே வெளியே தெரியவேண்டும் என நினைக்கிறேன். எனது தனிப்பட்ட விஷயங்கள் செய்தி ஆவது தேவையில்லாதது. அதை வெளிப்படுத்த விரும்பவில்லை. மற்றவர்களுக்கு அது வேண்டிய விஷயமும் இல்லை என்கிறார். மும்பையைச் சேர்ந்த நீது சந்திரா தற்போது சர்வதேசப் படம் ஒன்றில் நடித்துவருகிறார். அதுபற்றிக் கூறுகையில், சர்வதேச படம் அல்லது ஹொலிவுட் படங்களில் நடிக்க வேண்டும் என்று எப்போதும் நினைத்ததில்லை. அப்படியொரு ஆசையும் இல்லை. இருந்தாலும் எதிர்பார்க்காத விஷயங்கள் சில நேரங்களில் நடந்துவிடுவது உண்டு. அப்படிக் கிடைத்ததுதான் இந்தப் பட வாய்ப்பும் என்றார். விவரமானவர்தான்!




பொலிவுட்டில் கலக்கி வரும் அசின், தனக்கு சரியான ஜோடி அக்ஷய் குமார் தான் என்று கூறியுள்ளார். சமீபத்தில் வெளியான "ஹவுஸ்ஃபுல் 2" படத்தில் அக்ஷய குமாருக்கு ஜோடியாக நடித்த அசின், அவரது அடுத்த படமான கில்லாடி 786 என்ற படத்திலும் நாயகியாக ஒப்பந்தம் ஆகியுள்ளார். "அக்ஷய் குமாருடன் நடிப்பது சுலபம், அவர் கலகலப்பானவர், எளிமையுடன் பழகுவார், அவருடன் நடிப்பது மறக்க முடியாத அனுபவம்" என்கிறார் அசின். பண்பில் உயர்ந்த சல்மான்கான் என்ன ஆனார்?



சமரன் படத்தை தொடர்ந்து நடிகர் விஷால், அடுத்து சுந்தர்.சி இயக்கும் படத்தில் நடிக்கிறார். இப்படத்தில் விஷால் மூன்று வேடங்களில் நடிக்கிறார். நாயகிகளாக வரலட்சுமி, டாப்ஸி ஆகியோர் முடிவாகியுள்ளார்கள். மூன்றாவது கதாநாயகியாக ராதாவின் மகள் கார்த்திகாதான் நடிப்பதாக கூறப்பட்டது. ஆனால் இப்படி கும்பலில் ஒருவராக எல்லாம் நடிக்க முடியாது என்று அவர் விலகிவிட்டார். இனி மூன்றாவது யார் என்பதை சுந்தர்.சி யின் தயாரிப்பாளர் குஷ்புதான் சொல்ல வேண்டும். படத்திற்கு தலைப்பாக "மதா கஜா ராஜா" என்பதை சுருக்கி எம்.ஜி.ஆர். என்று வைத்துள்ளனர். பேருக்காகவே பிய்த்துக்கொண்டு போகப் போகிறது!

சுந்தர்.சி ஒருவரையே மூவராக நடிக்க வைத்தால், இயக்குநர் வஸந்த் மூன்று பேரும் மூன்று காதலுமாகக் களமிறங்கியிருக்கிறார். "மூன்று



பேர் மூன்று காதல்" என்ற இந்தப் படத்தில், நான்கு தேசிய விருது பெற்ற கலைஞர்கள் நடிக்கின்றனர். சேரன், தம்பி ராமய்யா, அப்புக்குட்டி மற்றும் டைரக்டர் வஸந்த் ஆகியோர் தான், அந்த நான்கு கலைஞர்கள். இதில் வஸந்த் தேசிய விருது பெற்றிருப்பது சா.கந்தசாமியின் "தக்கையின் மீது நான்கு கண்கள்" என்ற சிறுகதையை குறும்படமாக இயக்கியதற்காக.

# ஐரோப்பா – ஒலிவ் மரங்களின் சதி!!



ஐரோப்பிய இணையத்து நாடுகள் பற்றிய செய்தி. எங்கோ ஒரு வண்ணத்துப் பூச்சி சிறகடித்தால் உலகின் மறுபக்கம் சுனாமி வந்தறையும் என்று ஒரேயடியாக அதீதப்படுத்தி யோசிக்கும் கருத்துகளைக் கேட்டிருக்கிறோம். "பெருங்குழப்பம்" இயற்கையில் உள்ளதென்றும் அதைப் படிப்படியாக அணுகி யோசிப்பது உதவாத அணுகல் என்றும் சொல்லும் வாதங்கள் இவை. அதே நேரம் வேறு விதமான கணிதம், புள்ளியியல் இணைப்போடு இயற்கையை அணுகச் சொல்வனவே இந்த வாதங்கள், அறிவியலை ஒதுக்கிவிடச் சொல்லும் வாதம் இல்லை.

இங்கொரு பொருளாதாரக் குழப்பம் பற்றிய சிறு தகவல். சமீபத்தில் தூய்மை சற்றும் கெடாத ஒலிவ் எண்ணெய், அதாவது மிகக் குறைவாகவே வடிகட்டப் பட்ட ஒலிவ் எண்ணெய்க்கான சந்தை பெரும் விலைச்சரிவைச் சந்தித்ததைச் சொல்கிறது செய்தி. கடந்த சில வருடங்களாக இந்த எண்ணெயைப் பயன்படுத்துவதால் மிக்க உடல்நல முன்னேற்றம் கிட்டும் என்று "வதந்தி" நிறையப் பரவியதால் மேற்குலகில் எங்கும் இந்த எண்ணெய்க்கான விலை எகிறி இருந்தது. அப்படி இருக்க திடீரென்று ஏன் இந்த எண்ணெயின் விலை உலகச் சந்தையில் பெரிதும் சரிந்தது?

காரணம் அத்தனை மர்மமானதொன்றில்லை. கும்பி காய்ந்தால் கருவாடும் இனிக்கும் என்று ஒரு சொல்வழக்கு கேட்டிருப்பீர்கள். அதுதான் இங்கும் செயல்படுகிறது. மத்தியதரைக் கடல் பகுதியில், குறிப்பாக இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் பொருளாதாரம் பெரும் சரிவு. வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர் நடுவே 50 வீதம் எல்லாம் கூடப் போயிருக்கிறது. எனவே அந்நாடுகளில் இந்த எண்ணெயை வாங்குவோர் மிகக் குறைந்து விட்டனர். தவிர இந்த வருடம் அநியாயத்துக்கு இந்த ஒலிவ் மரங்கள் காய்த்துக் கொட்டி விட்டனவாம். இப்படியுமா இயற்கை ஒலிவ் விவசாயிகளுக்கெதிராகச் சதி செய்யும்?

# பாம்புச் செவி உண்மையா?



உண்மையில் சொல்லப் போனால் பாம்புக்குச் சுத்தமாகக் காது கேட்காது. இது ஒரு செவிட்டுப் பிராணி என்பதே உண்மை. ஊர்வன வகையைச் சார்ந்த எந்த உயிரினத்திற்கும் பாலூட்டிகளைப் போல புறக்காது கிடையாது. ஆனால், மாண்டிபுளார் வழி எனப்படும் காது துளை உண்டு. இத்துளைகள் மூலம் இவை ஓசையை நன்கு கேட்டு அறிய முடியும். ஆனால், பாம்புக்கு மாண்டிபுளார் செவியும் கிடையாது.

அதேசமயம் பாம்பு மிகவும் அருகில் ஏற்படும் அதிர்வுகளை அறிந்துகொள்ளும் திறன் பெற்றது. இதைத்தான் பாம்புக்கு கூர்மையான செவி அமைப்பு உடையதாக தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். இருப்பினும் ஒரு கூடுதல் செய்தி என்னவென்றால், பாம்பாட்டிகள் மகுடி ஊதும்போது, மகுடி ஓசை மென்மையாக பூமியில் தவழ்ந்து ஓடுகிறது. அவ்வாறு தவழ்ந்தோடும் இசை பூமியின் தரை மீது இருக்கும் பாம்பின் உடலில் பட்டு அதிர்கிறது. அந்த அதிர்வுக்கு ஏற்பவே பாம்பு படமெடுத்து ஆடுகிறது.

# அறிவியல் கட்டுக்கதைகள்?

முதலியம் என்பதில் மலினப்படும் விடயங்கள் இன்னது என்று எளிதில் சொல்ல முடியாது. குழந்தை வளர்ப்பில் தொடங்கி இறந்தவரின் உடலை எரிப்பது/புதைப்பது வரை எல்லா இடங்களிலும் ஊடுருவும் இலாப நோக்கு என்பது அதன் இரத்த ஓட்டம். எனவே இந்தச் செய்தி நமக்கு வியப்பைத் தரத் தேவை இல்லை. இருந்தாலும் தொடர்ந்து எச்சரிக்கையாக இருப்பது நமக்கு அவசியமாகிறது. திருடர்களே நாட்டை நடத்துகையில் எங்கும் எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்தானே?

பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் அறிவியல் செய்திகளை எழுதிப் பிரசுரிக்கும் செய்தியாளர்கள், பத்திரிகைகள் ஆகியன தொடர்ந்து விலைபோகும் மலினங்கள் என்றும் பெரும்பாலானவை ஏமாற்று என்றும் ஒரு கட்டுரையாளர் சொல்கிறார். நிறுவனங்கள் தம் பொருட்களை விற்பதற்காக, அறிவியல் ஆய்வு என்ற பெயரில் வெறும் விளம்பரங்களைப் போர்த்தி கட்டுரையாகப் பிரசுரிக்க பத்திரிகையாளர்களைக் கேட்க அவர்கள் அரை அடி தாண்டச் சொன்னால் மூன்றடி தாண்டித் தம்மை எளிதே விற்கத் தயாராகி விடுகிறார்கள். மேற்படி நாட்டுப் பத்திரிகைகளில் ஏராளமான "குப்பை"ச் செய்திகள், பொய்கள் அறிவியல் என்ற பெயரில் பிரசுரமாகின்றன என்று சில சான்றுகளுடன் அவர் எழுதுகிறார். ஆனால் இவர் கொடுப்பன எத்தனை சான்றாக அறிவியல்/புள்ளியியல் பார்வையில் ஏற்கப்படும் என்று வேறு யாராவதுதான் சோதித்து எழுத வேண்டும். இதுவுமே ஒரு பட்டம் விடும் வேலையாக இருந்தால் நாம் என்ன செய்வது?

http://www.slate.com/articles/health_and_science/science/2012/05/science_in_the_telegraph_and_the_daily_mail_what_s_wrong_with_british_journalism_.single.html

# செண்பகப் பாண்டியனின் சந்தேகம்!

— சு. முத்து —



"செறி எயிற்று அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே" என்று சொன்னால் இன்று நம்மில் பலருக்குப் பொருள் புரியாது. ஆனால், அந்நாளில் மன்னருக்குப் புரிந்தது.

அரசமாதேவியின் கூந்தல் மணம் இயற்கையானதா அல்லது வாசனாதித் திரவியங்கள் பூசிக் கொள்வதால் வந்ததா? மிகத் தேவையான சந்தேகம். அரசர் என்பதால் இறையனாரே ராணிக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு வழங்கினார்.

பெண் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டு என்று அர்த்தமாம். அறிவியல் ரீதியில் உரோமத்திற்குச் சிறந்த மணம் கிடையாது. உண்மையில் சிக்கும் செள்ளும் ஆண், பெண் பேதம் பார்க்காது. இருக்கும் இடத்திற்கு ஏற்ப முடி மணம் மாறும். அவ்வளவுதான்.

சுவிட்சர்லாந்துப் பெண் விஞ்ஞானிக்கு ஒரு யோசனை. ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் வாசனை மாறுபடுகிறதா என்பதை ஆராய்ந்தார். ஜெனிவா நகரில் ஃபெர்மெனிச் என்கிற கம்பெனி ஆய்வாளர் கிறிஸ்டியன் ஸ்டர்க்கென்மான்.

24 ஆடவர்களையும், 25 பெண்களையும் தமது ஆய்வுக் கூடத்திற்கு வரவழைத்தார். நிறுத்திவைத்த சைக்கிளை ஒவ்வொருவராகத் தனித்தனியே 15 நிமிட நேரம் ஓட்டச் செய்தார். அவரவர் வியர்க்க விறுவிறுக்க வந்தவர்களின் அக்குளில் வியர்வை மாதிரிகள் எடுத்துப் பரிசோதித்தார். தோலில் "அப்பாக்ரின்" சுரப்பிகள் அருளும் நீர்மங்கள். தாய்ப்பாலில் கொழுப்பு சேர்ப்பதும், பாலுறுப்புகளில் வழுவழுப்பு கூட்டுவதும், காதுக்குள் குரும்பி மெழுகு திரட்டுவதும், மேல் தோலில் வியர்வை சுரப்பதும் எல்லாம் அப்பாக்ரின் சுரப்பியின் ஆசீர்வாதம்.

எப்படியோ, ஆண்களின் அக்குளில் பாலாடைக் கட்டி மணமும் பெண்மணிகளின் உடம்பில் இருந்து வெங்காய வாசனையும் அடித்ததாம். காரணம், பெண்களிடம் ஒரு மில்லி லீற்றர் வியர்வையில் 5 மில்லிகிராம் கந்தகக் கூட்டுப்பொருள் அடக்கம். ஆண்களிடமோ கந்தக அம்சம் பத்தில் ஒருபங்குதான். ஆண் வியர்வையில் பெருமளவு கொழுப்பு அமிலங்கள்.

உடம்பில் சில நுண்ணுயிரிகள் புரதத்தினைச் சிதைத்து அமிலங்களாக மாற்றுகின்றன. உடல் நாற்றத்தின் அடிப்படை புரொப்பியானிக், ஐசோவாலெரிக் அமிலங்கள். தொப்பைகள், கார மசாலா தின்னிகள், நீரிழிவு நோயாளிகள் எனச் சிலரிடம் இந்தத் துர்நாற்றம் அடிக்கும். குடிகாரர் அருகில் அழுகல் பழத்தின் வினாகிரி அமில நாற்றம்.

உடல் மண வேற்றுமைக்கு அவரவர் உணவுப் பழக்கமும், உடை அழுக்கும், குளியல் முறைகளும் காரணம். இங்கிலாந்து நாட்டில் அவர்கள் கார் ஓட்டு கைப்பிடியில் பாக்டீரியாக்கள் எண்ணிக்கை எக்கச் சக்கம் என்கிறது ஒரு புள்ளிவிவரம். தண்ணீரைத் தொட மறுத்து பேப்பரால் துடைத்துவிட்டுச் செல்பவர்களல்லவா!

# கதை திரும்பியதேன்...?

வோல்டர் ஹைன்ஸ் பேஜ் என்பவர் ஒரு பத்திரிகை ஆசிரியர். இவர் ஏராளமான சிறுகதைகளை நிராகரித்துத் திருப்பி அனுப்பிவிடுவது வழக்கம். ஒருமுறை, பெண்மணி ஒருவர் இவருக்குக் காரசாரமாக ஒரு கடிதம் எழுதினாள். "அன்புள்ள ஆசிரியரே! சென்ற வாரம் நான் அனுப்பிய கதையை நிராகரித்துத் திருப்பி அனுப்பிவிட்டீர்கள். நீங்கள் அந்தக் கதையைப் படிக்கவே இல்லை. ஏனெனில், நான் உங்களைச் சோதித்து பார்க்கும் விதமாக கதையின் ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய பக்கங்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டி அனுப்பினேன்.



நீங்கள் அவற்றை அப்படியே (பிரிக்காமல்) திருப்பி அனுப்பிவிட்டீர்கள். இதிலிருந்து நீங்கள் ஒரு மோசடிப் பேர்வழி என்பதும், கதைகளைப் படிக்காமலேயே திருப்பி அனுப்புகிறவர் என்பதும் தெரிந்துவிட்டது."

வோல்டர் ஹைன்ஸ் பேஜ் அந்தக் கடிதத்துக்கு இவ்வாறு பதில் எழுதினார்: "அம்மணி, நாம் சாப்பிட தட்டில் வைக்கும் உணவு பழுதடைந்திருப்பது முகர்ந்து பார்த்தாலே தெரிந்துவிடும். முழு உணவையும் தின்று பார்த்துத்தான் அது கெட்டுப் போயிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டுமா என்ன...?"


# ஜோதாதையர் பாட்டு!



ஜேர்மனி நாட்டை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சீனா, லாவோ, கம்போடியா மற்றும் வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளின் மழைக் காடுகளில் காணப்படும் கிப்பன் வகை குரங்குகள் பற்றி மேற்கொண்ட ஆய்வில் அவை பாடல்கள் பாடுவதைக் கண்டறிந்துள்ளனர். பெரும்பாலும் மனிதனை ஒத்து காணப்படும் இந்த கிப்பன் குரங்குகள் தங்களுக்கென்று பாடல்கள் வைத்திருக்கின்றனவாம். தனது இணையை கவரவும், எல்லைகளை பிறருக்கு தெரியப்படுத்தவும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் என்று பல விசயங்களுக்கு பாடல்களை பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளன. இதில் டூயட் பாடல்களும் அடங்கும்.

ஆய்வில், 92 டூயட் பாடல்கள் உட்பட 400 பாடல் மாதிரிகளை சேகரித்தனர். பின்னர் அந்த பாடல்களை ஏறத்தாழ 53 வேறுபட்ட அலைவரிசைகளில் பிரித்து சோதனை செய்தனர். அதில் கம்போடியா, லாவோ மற்றும் வியட்நாம் ஆகிய பகுதிகளை சேர்ந்த கிப்பன்கள் ஒரே மாதிரியான டி.என்.ஏ. அமைப்பை கொண்டிருந்தது. மேலும் 4 ரகமான தனித்தன்மை வாய்ந்த பாடல்களை அவை பாடுவதும் தெரிய வந்தது. குறிப்பாக வடக்கு வியட்நாம், சீனா ஆகிய பகுதிகளை சேர்ந்த கிப்பன்கள், தெற்குப் பகுதியைச் சேர்ந்த கிப்பன்களை காட்டிலும் பல வகைகளில் வேறுபட்டிருப்பது ஆய்வின் முடிவில் தெரிய வந்துள்ளது.

# செயற்கைக் கருவூட்டல்: கவனமின்மையும் பின்விளைவுகளும்



ஆண்-பெண் மலட்டுத் தன்மை என்பது சந்ததியைப் பெருக்க முடியாத உடல் சார்ந்த உயிரியல் குறைபாடு. மாறிவரும் சுற்றுச்சூழல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைமுறை தேர்வுகளினால் உலகளவில் ஆண் மலட்டுத்தன்மை அபாயகரமான அளவில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வீரியமுள்ள விந்தணுக்களின் எண்ணிக்கை குறைதல் அல்லது அவற்றின் ஊர்தலில் (Motility) குறைபாடு போன்றவை மருத்துவ ரீதியாக ஆண் மலட்டுத் தன்மை எனப்படுகிறது.

குடிப்பழக்கம், புகைபிடித்தல், கஞ்சா போன்ற போதைப் பொருட்களைத் தொடர்ந்து உபயோகித்தல், சத்துக்குறைவான உணவு, விற்றமின C குறைபாடு, தொடர்ந்த மன அழுத்தம், அளவுக்கதிகமான உடற்பயிற்சி, இறுக்கமான உள்ளாடைகள் அணிதல் போன்ற தனிப்பட்ட வாழ்க்கை முறை பிரச்சினைகள் ஆண் மலட்டுத்தன்மைக்கு காரணம். இவை முயன்றால் திருத்திக் கொள்ளக் கூடிய, நம் எல்லைக்குள் இருக்கும் காரணிகள்.

ஆனால், பூச்சிகொல்லிகள் போன்ற பல இரசாயன நச்சுக்கள், காரீயம், பெயின்ற் போன்ற சிலவகை வண்ணப்பூச்சுகள், கதிர்வீச்சு, பாதரசம், போரான், பென்சீன் மற்றும் அடர் உலோகங்கள் எனப் பல காரணிகள் நாம் வாழும் சுற்றுச்சூழலுக்குள் பரவுவதன் மூலம் நமது ஆரோக்கியமான வாழ்க்கையில் மலட்டுத்தன்மை உட்பட பல நேரடி மற்றும் மறைமுக எதிர் விளைவுகளை உண்டாக்குகின்றன. இவற்றின் கட்டுப்பாடு சாமானியர்களான நம் கையில் இல்லை. விளைவுகள் என்னவோ அனுபவித்தே தீர வேண்டியுள்ளது.

ஆண், பெண் மலட்டுத் தன்மையினால் குழந்தைப்பேறு இல்லாமல் போகும் நிலை வெறும் தனிப்பட்ட பிரச்சினை அல்ல, முக்கியமான சமூகப் பிரச்சினையும் ஆகும். உலகம் முழுவதும் இதற்குத் தீர்வாக பாரம்பரியமாக செய்யப்பட்டு வந்தது குழந்தைகளைத் தத்தெடுத்தல். இரத்த உறவுகளிலோ அல்லது நெருங்கிய சொந்தங்களிலோ ஒரு குழந்தையைத் தத்தெடுப்பது அல்லது அனாதைகளாக விடப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுத்து சொந்த வாரிசாக வளர்ப்பது. ஆனாலும் இதில் கருச்சுமந்து பிரசவித்தல் என்னும் தாய்மை நிறைவை அடைய முடியவில்லை என்னும் குறையை மானசீகமாக உணர்பவர்களும் உண்டு. நவீன மருத்துவ வளர்ச்சி இந்தக் குறைக்கு தீர்வாக செயற்கைக் கருவூட்டல் முறைகளைக் கண்டடைந்தது.

விந்தணு தானம், கருமுட்டை தானம், வாடகைத் தாய் போன்ற முன்னேறிய மருத்துவத் தொழிநுட்பங்களால் ஆண் மற்றும் பெண் மலட்டுத் தன்மைப் பிரச்சினைகள் உள்ள தம்பதிகளின் குழந்தைப்பேறின்மைக் குறை தீர்க்கப்படுகிறது. இதில் முன்னரே கூறியதைப போல ஆண் மலட்டுத் தன்மை உலகளவில் வேகமாக அதிகரித்து வருகிறது. எனவே கருவடையச் செய்யும் தகுதியுள்ள ஆண் கொடையாளரிடமிருந்து விந்துதானம் பெற்று கருவடைந்து குழந்தைப்பேறு பெறும் பெணகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

பொதுவாக விந்தணு வங்கிகள் (Sperm Banks), கொடையாளரிடமிருந்து விந்தணுக்களைப் பெற்று அவற்றை உறைபதனப்படுத்தி சேமித்து வைக்கும் மருத்துவமனைகள் தேவைக்கேற்ப அவற்றைப் பெற்று உபயோகப்படுத்திக் கொள்ளும். தகுதியுள்ள கொடையாளரிடமிருந்து விந்தணுவைப் பெற்று சேமிக்கும் முன்பு அவரது உடல் ஆரோக்கியம் பரிசோதிக்கப்பட வேண்டும். தொற்று நோய்கள், மரபணுக் கோளாறுகள் போன்றவை முக்கியமாகச் சோதிக்கப்பட வேண்டும்.

தொழிலாக நடத்தப்பெறும் இந்த விந்தணு வங்கிகளில் இந்தப் பரிசோதனைகள் முழுமையாக உரிய கவனத்துடன் நடத்தப்படுகின்றதா என்பது ஒரு மிகமுக்கியமான கேள்விக்குறி. இங்கு தான் இதுவரை பெரிதாக கவனத்தில் கொள்ளப்படாத ஒரு நடைமுறைப் பிரச்சினை சமீபத்தில் செய்யப்பட்ட ஒரு அமெரிக்க கள ஆய்வின் மூலம் வெளிவந்துள்ளது. அதைப் பற்றி 'த நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை ஒரு கட்டுரையை வெளியிட்டு, பரவலான கவனத்தை இந்தப் பிரச்சினையை நோக்கி ஈர்த்துள்ளது.

அந்தச் செய்தியின் படி, இரண்டாவது குழந்தைப் பேறுக்கு விரும்பிய ஒரு அமெரிக்க தம்பதி மருத்துவரின் ஆலோசனைப்படி செயற்கை விந்தூட்டலின் (Artificial Insemination) மூலம் கருத்தரிக்க முடிவு செய்தனர். பெண்ணுக்கு அமெரிக்காவின் பொஸ்டனிலுள்ள ஒரு விந்தணு வங்கியின் சேகரிப்பில் இருந்த, மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சான்றளிக்கப்பட்ட கொடையாளர் ஒருவரின் விந்தணுக்கள் மூலம் கருவூட்டப்பட்டது.

**சிவப்பான ஆண்களின் விந்தணுக்குத் தான் பெண்களிடம் கிராக்கி, அமிதாப் பச்சன் போன்ற உயரமான ஆண்களின் விந்தணுக்களையே விரும்புகின்றனர், ஐஐடி பட்டதாரிகளின் விந்தணுக்களுக்கு கோரிக்கை அதிகம். இது போல மதம், இனம், கல்வித்தகுதி, விளையாட்டு, கலைகளில் தேர்ச்சி, அழகு போன்றவற்றை அடிப்படையாக வைத்து விந்தணுக்களை தேர்ந்தெடுக்கும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உண்டு.**

உரிய நேரத்தில் அழகான ஆண் குழந்தையும் பிறந்தது. மகிழ்ச்சியில் திளைத்த தம்பதிக்கு இடியாக வந்து இறங்கியது இன்னொரு செய்தி. குழந்தையின் குடல் அசைவில் ஏற்பட்ட பிரச்சினைக்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமையில், சந்தேகம் கொண்ட மருத்துவர்கள் மரபணுப் பரிசோதனை மேற்கொண்டதில் குழந்தைக்கு 'சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்' (Cystic Fibrosis) என்னும் மரபணுக் குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நுரையீரல், கல்லீரல், கணையம் மற்றும் குடலின் உட்பகுதியில் அளவுக்கு மீறி அடர்த்தியாக வளரும் இழைநார்கள் (fiber) மற்றும் கோழையால் (mucous layer) உண்டாகும் நோய் தான் 'சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்'. மூச்சுவிடுவதில் சிரமம், உணவு செரித்தலில் குறைபாடு, ஆண் மலட்டுத் தன்மை, நீரிழிவு என்று பல உடல் நலக் குறைபாடுகள் - சில சமயம் உயிருக்கு அபாயம் உண்டாக்கும் கடுமையான குறைபாடு. மரபணுக் குறைபாட்டால் வரும் இந்நோய் பரம்பரையாகக் கடத்தப்படும்.

பாதிக்கப்பட்ட குழந்தையின் தாயின் மரபணுவை சோதித்ததில் நோய் தாக்காத ஆனால் நோய்தாங்கியாக (Carrier) அவர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (சில மரபணுக்குறைகள் ஒடுங்கு பண்புகளாக இருக்கும், அதனால் ஒரு குரோமோசோமில் மட்டும் குறைபாடிருந்தால் அவருக்கு பாதிப்பு இருக்காது, அவரை மரபியலில் தாங்கி என்று குறிப்பிடுவார்கள்). சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் உண்டாவதற்கு ஒருவரின் இரண்டு குரோமோசோம்களும் மரபணுக் கோளாறு கொண்டிருக்க வேண்டும். ஏதாவது ஒன்று இயல்பானதாக இருந்தாலும் நோய் வராது. அப்படியானால் விந்தணு தானம் செய்தவருக்கும் அந்த மரபணுக் கோளாறு இருக்க வேண்டும். சோதித்ததில் அதுவும் உறுதி செய்யப்பட்டது. அப்போது இந்நோயிருப்பதை அறிய உதவும் மிக அடிப்படையான, கட்டாயம் செய்யப்பட வேண்டிய மரபணு சோதனை எப்படி செய்யப்படாமல் விடுபட்டது என்ற கேள்வியும், விந்தணு தானத்தின் நம்பகத்தன்மையின் மேல் சந்தேகமும் எழுகிறது.

காதலித்து, திருமணம் செய்து கொண்டு, அன்பினால் தங்களது வாழ்க்கையின் ஒரு பாகமாகிவிட்ட ஒருவருடனான பந்தங்களிலும் இதே போல மரபணுக் குறைகளுள்ள குழந்தைகள் பிறக்க நேரலாம். ஆனால் முன்பின் தெரியாத, சிலசமயம் மருத்துவ அறிக்கையைத் தவிர எந்தத் தகவலும் அறியாத ஒருவருடைய விந்தணு அல்லது கருமுட்டையால் மரபணுக்கோளாறுடன் குழந்தை பிறப்பதை யாரால் தாங்கிக்கொள்ள முடியும்?

இதே போல இருதய பாதிப்பு, மூளைக் கோளாறு, நரம்பு மண்டலப் பிரச்சினைகள், புற்று நோய் என்று பல நோய்களுக்கான மரபணுக் கோளாறுகளுடன் பிறந்த - விந்தணு தானத்தில் உருவாக்கப்பட்ட பல ஆயிரம் குழந்தைகள் உண்டு. பலர் இள வயதிலேயே இறந்ததும் உண்டு. இங்கே இன்னொரு முக்கியமான கவனிக்கப்பட வேண்டிய விஷயம், இவற்றில் ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து நோய் கண்டுபிடிக்கப்பட்ட போதே மரபணுப் பரிசோதனை செய்திருந்தாலோ, விந்தணு தானம் மூலம் பிறக்கும் குழந்தைகளின் உடல் நலத்தை தொடர்ந்து கவனித்து ஆவணப்படுத்தி இருந்தாலோ அல்லது அதற்குக் காரணமான விந்தணுவை மறு பரிசோதனைக்கு உட்படுத்தி இருந்தாலோ அந்தக் கொடையாளர்களின் விந்தணுவை அடுத்து வேறெவருக்கும் வழங்காமல் நிறுத்தியிருக்கலாம். இதன் மூலம் பிறக்கும் போதே மரபணுக் குறையுடன் பிஞ்சுக் குழந்தைகள் பூமிக்கு வர நேரும் பல கொடுமைகளைத் தவிர்த்திருக்க முடியும். இதைச் செய்யாத சம்பந்தப்பட்டவர்களின் அசிரத்தையினால் நாம் கற்றிருக்கும் பாடம் மிகுந்த வலிகளையும், இழப்புகளையும் உடையது.

அமெரிக்காவில் வெண்டிக்ரேமர் (Wendy Kramer) என்பவர் ஒரே விந்தணு அல்லது கருமுட்டைக் கொடையாளர்கள் மூலம் பிறந்த குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை இணைக்கும் வகையில் ஒரு கொடையாளர்-சகோதரத்துவ இணையதளத்தை 2000இல் தொடங்கினார். இதனால் செயற்கைக் கருவூட்டல்களில் பிறந்த குழந்தைகள் வளரும் போது அவர்களின் மரபியல் ரீதியான 'சகோதரர்களை'த் தொடர்பு கொள்ளவும், சட்ட ரீதியான உரிமைகள், சமூகம் சார்ந்த எதிர்கொள்ளல்கள் போன்றவற்றில் உதவியாகவும், தங்களது அடையாளத்தின் வேர்களைத் தெரிந்து கொள்ள அவர்களுக்கு இருக்கும் உரிமைக்கு வழிகாட்டியாகவும், யாருக்கேனும் மரபணுக் கோளாறுகளினால் நோய்கள் ஏற்பட்டால் அறிந்து கொண்டு உடனடியாக எச்சரித்து அந்த கொடையாளரின் விந்தணுவை இனிமேல் உபயோகிக்காமல் தடுக்கவும் உதவியாக இருக்கும்.

ஆனால் இணையத்தில் இந்தியப பத்திரிகைகளில் தகவல் தேடினால் இது போன்ற சமூகத்துக்கு பயன்படும் செய்திகளை விட, 'பிராமண' விந்தணுக்களையே அதிகம் பேர் விரும்புகின்றனர், முஸ்லிம்கள் முஸலிம் அல்லாதவர்களின் விந்தணுக்களை விரும்புவதில்லை, சிவப்பான ஆண்களின் விந்தணுக்குத் தான் பெண்களிடம் கிராக்கி, அமிதாப் பச்சன் போன்ற உயரமான ஆண்களின் விந்தணுக்களையே விரும்புகின்றனர், ஐஐடி பட்டதாரிகளின் விந்தணுக்களுக்கு கோரிக்கை அதிகம். இது போல மதம், இனம், கல்வித்தகுதி, விளையாட்டு, கலைகளில் தேர்ச்சி, அழகு போன்றவற்றை அடிப்படையாக வைத்து விந்தணுக்களை தேர்ந்தெடுக்கும் வழக்கம் எல்லா நாடுகளிலும் இன்றும் உண்டு.

1980இல் றொபேர்ட் கிரஹாம் என்னும் அமெரிக்கர் விந்தணு தானத்தின் மூலம் மிகச்சிறந்த குழந்தைகளை உருவாக்க வேண்டி நோபல் பரிசு பெற்றவர்களின் விந்தணுக்களைச் சேகரித்து ஒரு விந்தணு வங்கியை உருவாக்கினார். ஆனால் பெரும்பாலும் நோபல் பரிசு பெறும் அறிஞர்கள் வயதானவர்களாக இருபபதால் இவரின் திட்டத்திற்கு போதிய 'ஆதரவு' கிடைக்கவில்லை. இருந்தாலும் இருபத்தியொரு அறிஞர்களின் விந்தணுக்களை அவரது வங்கியில் சேகரித்து வைத்திருந்தார். இதன் மூலம் 219 குழந்தைகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். பின்னர் அவர் இறந்ததும் 1999இல் அவரது விந்தணு வங்கி மூடப்பட்டது. இதே வகையிலான இன்னும் பல தகவல்கள் இணையத்தில் கொட்டிக் கிடக்கின்றன.

- பிரகாஷ் சங்கரன்

# தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தும் அதனை இழக்கும் நிலையே அதிகம்



(கிரு-சிகரம்)

தொழில் வாய்ப்பு இருந்தும் தொழில் செய்வதற்கு யாரும் இல்லை என யாழ்ப்பாணம் மீசாலை மேற்கு மீசாலை அபி புரொடக்சன் நிறுவன தலைவர் முருகானந்தம் தெரிவித்தார்.

அவர் தனது நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் ஆண்களுக்காக ஜீன்ஸ் சேட் வகைகளை தைத்து ரெடிமெற் ஆடைகளாக வடமாகாணத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனை செய்து வரும் நிலையில்35 ஊழியர்கள் வேலை செய்யக்கூடிய தனது கடையில் தற்போது 10 ஊழியர்களே பணியாற்றி வருகின்றனர்.

இந் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலினால் கைவிடப்பட்டு மிண்டும் 2011ஆம் ஆண்டு யூலை மாதம் தொடங்கி இயங்கிவருகின்றது.

இந்நிறுவனத்தால் தெற்கில் மேற்கொள்ளப்படும் ரெடிமெற் ஆடைகளைபோன்று தயாரித்து அதற்கு ஏற்ற தரங்களில்பல்வேறு விலைகளில் விற்பனைக்காக தயார் செய்யப்படுகிறது. என்றார்.

மேலும் நாம் மேற்கொள்ளும் உற்பத்திகள் யாவும் எமக்கு போதிய அளவு இலாபத்தை ஈட்டிதராவிட்டாலும் வேலைஅற்றோர் அதிகமாக வாழும் யாழ்ப்பாணத்தில் எம் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு இருந்தும் இங்குள்ள அனைவரும் அரசாங்க உத்தியோகத்தையே விரும்புகின்றனர். தனியார் வேலை வாய்ப்புக்களை அதிகளவில் விரும்புவதில்லை.

எனினும் இந் நிறுவனத்தில் தற்போது 25 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகிறது. யாராயினும் இந்நிறுவனத்தில் வேலைசெய்வதற்கு தயாராக இருந்தால் நிறுவனத்திற்கு நேரடியாக வந்தால் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். நிறுவனத்தின் ஊழியர்கள் அதிகரிக்கப்பட்டால் தைத்த ரெடிமெற் ஆடைகளை இனிவருங்காலத்தில் தென்பகுதி விறபனைநிலையங்களுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# காலநிலையில் சீரற்ற தன்மை; பலத்த காற்றால் மரங்கள் முறிவு

(கிரு-சிகரம்)

நாட்டில் தற்போது காணப்படும் சீரற்ற காலநிலையால், யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கடுங்காற்று வீசுகின்றது.

அதுமட்டுமன்றி, அதிகளவு வெப்பம் நிலவுவதுடன், சிறிய குளங்களின் நீரும் வற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பலதிசைகளிலும் இந்தக் காற்று வீசுவதால் கடந்த சில தினங்களாக விற்பனை நிறுவனங்களின் விளம்பரப்பலகைகள், வீதியோரங்களில் மிகப் பெரியளவில் நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பதாதைகள் என்பன முறிந்து விழுந்துகிடப்பதுடன் பல இடங்களில் மரங்களும் முறிந்துள்ளன. குறிப்பாக சில வீடுகளின் கூரைகளும் காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வீதியோரங்களில் தனிமையில் காணப்படும் மரங்களின் கிளைகள் முறிந்து மின்கம்பிக்கு மேல் விழுவதனால் அடிக்கடி மின்னசாரமும் தடைப்படும் நிலையும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு சுகநல கல்விச் செயற்பாடு


(கிரு-சிகரம்)

இவ் வருடம் போசாக்கு மாதத்தினை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் முன்பள்ளி பிள்ளைகளிற்கு தகுந்த நேரத்தில் 'தரமான உணவு தரும் என் பிளளைக்கு குண நல நிறைவு' என்ற தொனிப்பொருளில் சுக நலகல்விச் செயற்பாட்டு நிகழ்வொன்று கடந்த புதன் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரி எ.இ.ஞானயோதி தலைமையில் மாநகர முன்பள்ளியில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் சிறுவர்களுக்கு சத்துணவுவழங்கும் நிகழ்வும் சத்துணவுகள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பது பற்றிக் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி முதல்வரின் செயலாளர் கு.பற்குணராசா, பொது சன தொடர்பு உத்தியோகத்தர் ,மாநகர முன்பள்ளி பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார பாதுகாவலர்கள், நல்லூர் பகுதி குடும்ப நல உத்தியோகத்தர்கள் ,சுகாதார தொண்டர்கள் முன்பள்ளி பிள்ளைகளின் பெற்றோர்கள் பாதுகாவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# உடைக்கப்பட்ட கட்டடத்தின் மிகுதி உடைந்து விழும் அபாய நிலை



(கிரு-சிகரம்)

யாழ் மாநகர சபைக்கு முன்னுள்ள கட்டடத்தின் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம்-நல்லூர் ஆலயப் பகுதியில் மேற் கொள்ளப்பட்டுவருகின்ற வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக பல வீட்டுமதில்கள், கட்டடங்கள் இடிக்கப்பட்டு 14.மீற்றர் கொண்ட வீதியாக அகலிக்கப்படுகின்றது.

வீதி அகலிப்பு பணிகளுக்காக இடிக்கப்படும் கட்டிடங்களில் பல 60 இற்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கொண்ட கட்டடங்களும் காணப்படுகின்றன. இவற்றின் ஒரு பகுதி வீதி அகலிப்புபணிக்காக இடிக்கப்படுகின்றபோது ஏனையபகுதியின் உறுதித்தன்மை இழந்துள்ளது. இதனால் தற்போது இந்த பகுதியில் வீதி அகலிப்புக்காக வீதி தோண்டப்படுகின்ற அதிர்வினால் கட்டடத்தின் ஏனைய பகுதிகளும் வெடித்து விழும் நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அப்பகுதிமக்கள், அடுத்தமாதம் நடைபெற இருக்கும் நல்லுர்த்திருவிழாவினை காண அதிகமான பக்தர்கள் வந்து நிற்கும் இப்பகுதியில் இவ்வாறான ஒருகட்டிடம் கணப்படுவது எந்த வேளையிலும் உடைந்து விழுந்து உயிர் சேதத்தை ஏற்படுத்தும் எனவும் அதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்தக்கட்டடத்தை அகற்றி மக்களினது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கேட்டு கொள்கின்றனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு வாகன சாரதி, கனரக வாகன சாரதி, தொழில் நுட்ப உத்தியோகத்தர், உதவிக்கணக்காளர், வீட்டுப்பணிப்பெண் ஆகிய பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 075 8348 397 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். நகரில் இயங்கும் K.V.Printers இற்கு பெண் விற்பனையாளர் தேவை. க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கல்வி கற்றவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் 0771591677 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் கணித ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர், கணினி ஆசிரியர்கள் தேவை. பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் யூலை 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தி.இராசநாயகம் (தலைவர்) மகாதேவா ஆச்சிரமம் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும், மேலதிக விபரங்களுக்கு 021 4923 118 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

விளையாட்டு உபகரணங்களை யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் சந்தைப்படுத்துவதற்கு ஆட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையை Gvtrading@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

அன்ரா டிஜிற்றல் இமேஸ் நிறுவனத்தில் எழுதுவினைஞர், நிர்வாக உதவியாளர், சிற்றூழியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று காலை 9 மணிமுதல் 2மணிவரை இடம்பெறும் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன் 379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

---

துறைமுகம்,விமானநிலையம்,(தனியார்)தச்சர்,வெல்டர்,சாரதி, சுத்திகரிப்பு ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை. மேலதிக தகவல்களுக்கு 0778999299இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்புஆகிய இடங்களுக்கு புனர்நிர்மாணப்பணிகளுக்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிடவசதிகள் உண்டு. ஆர்வமுள்ளவர்கள் இல,136/6A பிரதான வீதி அனுராதபுரம் அல்லது 0778999299இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

E.soff நிறுவனத்திற்கு வரவேற்பாளர் போதனாசிரியர் பயிலுனர் தேவை ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் எதிாவரும் 6 நாட்களுக்குள் விண்ணப்பங்களை coordinator ,e soff computer studies ,nelliady branch, No 151 jaffna road nelliady என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

---

ஹோட்டல் ஒன்றுக்கு வரவேற்பாளர் roomboy தேவை. ஆர்வமுள்ளவாக்ள 0758377583 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

---

ஹோட்டல் ஒன்றுக்கு முன் அனுபவமுள்ள றூம் சேர்விஸ்,வெயிற்றர் pantryman,Bar man மற்றும் அனுபவமுள்ள Accountant தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773366446 அல்லது0212285318 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சர்வதேச sos சிறுவர் கிராமத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் சிறுவர் இல்லத்திற்கு பராமரிப்பாளர் (பெண்கள்) தேவை.ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 3ஆம்திகதிக்கு முன்னர் திரு.அருச்சுனன் சுவாமிநாதன் உதவிப்பணிப்பாளர் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் இல. 276 கனகரட்ணம் வீதி நல்லூர் அல்லது 0772366106அல்லது0773116602 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் நிர்மாண ஒப்பந்த வேலைகள், தச்சுவேலைகள், தளபாட உற்பத்தி வேலைகள் என்பவற்கு தச்சுத்தொழிலாளர் மரஅரிவு வேலையாளர்கள், தச்சு வேலையாளர்கள், பயிலுநர்கள் மேற்பார்வையாளர்கள், களஞ்சிக்காப்பாளர், கணக்குப் பதிவாளர், முகாமையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் முகாமைத்துவப்பணிப்பாளர், LMR Enterprises 36, பலாலி வீதி, கோண்டாவில் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.


---

நிறுவனம் ஒன்றில் டீசல் பாரஊர்திகள் திருத்துனர் மற்றும் உதவியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 9451 290, 071 9301624 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல முகாமைத்துவ நிறுவனமான NOVAGE INTERNATIONAL company இற்கு முகாமைத்துவ பயிற்சியாளர் தேவை. தங்குமிடம் இலவசம் ஆர்வமுள்ளவர்கள் 024 7900171 அல்லது 0770308484 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# அரசின் மொழிக் கொள்கைகளை மீறினால் அதிகாரிகள் மீது சட்டம் பாயும்



அரச மொழிகள் தொடர்பான கொள்கைகளை மீறும் அரச அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத தாக்கல் செய்யப்படும் என தேசிய மொழிகள் மற்றும சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய தேசிய மொழிகளில் பணியாற்ற வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், அரச நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளவரும் இலங்கையர்கள் தமது மொழிகளில், தமது பணிகளைச் செய்து கொள்ளலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

இந்த மொழி உரிமை சட்டத்தை மீறி செயற்படும் அதிகாரிகள் குறித்து கண்டறிய மொழி ஆய்வு அதிகாரிகள் அரச நிறுவனங்களில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாட்டு மக்கள் அரசியல் அமைப்புக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதால், அரசாங்கத்தின் மொழி தொடர்பான கொள்கை தனியார் துறையினருக்கும் பொருந்தும் என தெரிவித்துள்ள அமைச்சர் வாசுதேவ, தனியார் துறையினரும் மொழிக் கொள்கையை கடைபிடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா – யாழ்ப்பாணம் தினசரி 40 பஸ் சேவைகள்

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து சேவையின்போது வவுனியா சாலை வழியாக ஏனைய மாவட்டங்களிலிருந்து வரும் பஸ்களுடன் 40 சேவைகள் இடம்பெறுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பயணிகளின் நன்மை கருதி இ.போ.சபையின் நேர அட்டவணை வெளிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தினமும் காலை 4 மணிக்கு ஆரம்பமாகும் சேவைகள் இரவு 7.30 மணியுடன் நிறைவடைகின்றது. நேர அட்டவணை விபரம் வருமாறு:

**காலை சேவைகள்** 4.00, 5.00, 5.30, 6.30, 7.00, 7.15, 7.30, 8.00, 8.30, 9.00, 9.15, 9.30, 9.45, 10.00, 10.15, 10.30, 10.45, 11.00, 11.15, 11.30, 12.00.

**மதிய சேவைகள** 12.15, 12.30, 01.00, 01.15, 01.30, 02.00, 2.30, 2.45, 3.00, 3.30, 4.00, 4.15, 5.00, 5.30, 6.00, 6.30, 6.45, 7.00, 7.30.

# சிதைந்து போன குடியிருப்புக்கள்; புனரமைப்பு செய்வது எப்போது?

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதிகளான ஆனந்தபுரம், சிவநகர், 7ஆம் வட்டாரம், மந்துவில் போன்ற பகுதிகளில் உள்ள பொது மக்களின் இல்லங்கள் கடந்த கால போர் அனர்த்தங்களின் காரணமாக மிகவும் சிதைந்து அழிந்து போயுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதிலும் குறிப்பாக புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து மந்துவில் பிள்ளையார் கோவிலடி வரையான முல்லை பிரதான வீதியில் அமைந்துள்ள, வீதியின் இரு பக்கமும் உள்ள பொது மக்களின் வீடுகள் பலத்த சேதாரத்துக்குள்ளான நிலையில் காணப்படுவதோடு, இவ்வீதியால் பேருந்தில் செல்லும் மக்கள் தங்களின் இல்லங்களின் அழிவைக் கண்டு கண்ணீர் வடித்துச் செல்வதையும் காண முடிகின்றது. (138)

# யுத்தத்தால் நலிவடைந்தவர்களை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் சமூகத்தில் புறந்தள்ளப்பட்டுள்ள நபர்களை மீண்டும் சமூகத்துடன் இணைக்கும் நோக்கில் அரசாங்கம் சமூக ஒருமைப்பாட்டு வாரம் ஒன்றை அறிவிக்க உள்ளது. ஜூலை மாதம் 16 ஆம் திகதி முதல், 22 ஆம் திகதி வரை இந்த வாரம் அனுஷ்டிக்கப்படும்.

பிறப்பத்தாட்சி பத்திரம், திருமணச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட அன்றாடம் தேவைப்படும் ஆவணங்கள் இன்றி சமூகத்தில் பிற்படுத்தப்பட்டிருக்கும் நபர்களுக்கு தேவையான ஆவணங்களை வழங்குதல், விதவைப் பெண்களுக்கு சுயமாக தொழில செய்வதற்கு தேவையான உதவிகளை வழங்குதல், யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் பெற்றோரை இழந்துள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல் உள்ளிட்ட பணிகள் இந்த சமூக ஒருமைப்பாட்டு வாரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதனை தவிர போதிய பணம் வசதி இல்லாத நிலையில் சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியாதுள்ள வறிய மக்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

# பாதிவழியில் நிறுத்தப்பட்ட புதுக்குடியிருப்பு வீதிப் புனரமைப்பு

## புழுதிமழை ஓய்வது எப்போது?

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஒரு பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது, அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள், வாழ்வாதார வசதிகள் சரிவர நிறைவேற்றப்படாத நிலையில், பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்ட வீதி அகலிப்பு மற்றும் பாதை புனரமைப்பு போன்ற வேலைகள் தற்போது வேகம் குறைந்தனவாய் நடைபெறுவது குறித்து புதுக்குடியிருப்பு வாழ் மக்கள் தங்கள் விசனத்தையும், கவலையையும், அதிருப்தியையும் வெளியிட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து பரந்தன் நோக்கி செல்லும் பிரதான வீதியானது கிரவல மண் இடப்பட்டு கனரகவாகனங்கள் மூலம் பரவிச் சமப்படுத்தப்பட்ட நிலையில், அதன் மேல் காபற் இடும் பணி தாமதப்படுவது குறித்து மேற்படி மக்கள் பல சந்தேகங்களை வெளிப்படுத்தி வருவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது சோளகக் காற்று பலமாக வீசுவதாலும், வீதி சமநிலைப்படுத்தப்பட்ட நிலையில் அதன் மீது வேகமாகப் பயணிக்கும் வாகனங்களாலும் வாரியிறைக்கப்படும் செம்மண் கிரவல் புழுதிகளால் அவ்வீதியில் பயணம் செய்யும் பாதசாரிகள் மட்டுமின்றி, வீதிக்கு வடக்காக அமைந்துள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் வணிக நிலைய உரிமையாளர்களும் பல அசௌகரியங்களை சந்திப்பதோடு, உடலுக்கு ஒவ்வாத நோய்த்தாககத்திற்கும் (முட்டு, தொய்வு, ஆஸ்மா, இழுப்பு) ஆளாக வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு எல்லையில் அமைந்துள்ள ஒரு வணிக நிலைய உரிமையாளர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்; ஆரம்பத்தில் வீதி அகலிப்பு பணிகள் நடக்கும் போது எங்களுக்கு சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால், வீதிக்கு காபெற் போடுவினம். போட்டால், புழுதி அடிக்காது. அதனால் நோய் நொடிகள் வராது என்று நினைத்தோம். ஆனால் தற்போது வீதியை அகலித்து நிலத்தைச்சமப்படுத்திய பின்பு எல்லா வேலைகளும் ஓய்ந்து போன நிலையில் காணப்படுகின்றது.

வீதிக்கு காபெற் இடும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. அத்தோடு மழை காலத்திற்கு முன்பாக இந்த வேலைகளை பூரணப்படுத்த வேண்டும். இல்லையென்றால் கைவேலி மேட்டுப்பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு சந்தி வரையான வீதியில் வெள்ளம் வாரடித்துப் பாயும் போது கிரவல் மணலை அரித்துச் செல்லும் நிலை ஏற்படும். அப்படியொரு நிலை ஏற்படுமாயின் இவ்வளவு நாளும் இந்தப் புனரமைப்பு வேலைகள் செய்தும் மக்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. மாறாக குண்டும், குழியுமான பழைய நிலைக்கே வீதி போய்விடும். இதனால் மேலும் பாதிக்கப்படப் போவது பொது மக்கள்தான் என அவர் தெரிவித்தார். (138)

# விதிகளை மீறி சிகரெட் விற்பனை; 18 வர்த்தகர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 18 வர்த்தகர்களுக்கு, 72 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் பகுதியில் யாழ்.மதுவரி திணைக்களத்தினரால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது குறித்த 18 வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 18 வர்த்தகர்களுக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# கடமையை நிறைவேற்றாத பொலிஸார்; நீதிமன்றம் செல்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

பல குற்றச் செயல்கள் தொடர்பில் 11 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஜூலம்பிட்டியே அமரே என்ற நபர் பல வருடங்களாக சுதந்திரமாக செயற்பட்டுள்ளார். பொலிஸார் அவரைக் கைதுசெய்ய முடியாமல் போனமை சம்பந்தமாக பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்யவும் அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஜூலம்பிட்டியே அமரே மற்றும் அவரது குழுவினர் வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், இதுவரை அந்த ஆயுதங்கள் ஒப்படைக்கப்படவில்லை என தெரிவித்தார்.

இந்த விடயங்களையும், கட்டுவன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவும் பொலிஸார் உரிய முறையில் செயற்படாதது உள்ளிட்ட பிரதான விடயங்களை முன்வைத்து, பொலிஸாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல செய்ய உள்ளதாகவும் விஜித ஹேரத் கூறினார்.



2012 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வி மற்றும் தொழில் கண்காட்சியான "பியூச்சர் மைன்ட் 2011" கண்காட்சி கொழும்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# தண்டவாளம் கடத்திய ஐந்து பேர் கைது

கிளிநொச்சியில் இருந்து சட்டவிரோதமான முறையில் ரயில் தண்டவாள இரும்புகளை லொறியில் ஏற்றிச் சென்ற ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் சிரம்பியடி பிரதேசத்தில் பயணித்துக் கொண்டிருந்த லொறியை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் சோதனை செய்தபோது அதிலிருந்து 37 ரயில் தண்டவாள இரும்புத் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் இருந்து இந்த இரும்புகளைக் கடத்திவந்த புத்தளம் மற்றும் பாலாவி பகுதியில் வசிக்கும் ஐந்து சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

28. எமது நாட்டுக்குரிய சிமெந்தை உற்பத்தி செய்ய பயன்படும் கல்

1. இரத்தினக்கல் 2. சுண்ணக்கல் 3. கூழாங்கல் 4. கபூக்

..............................

29. இலங்கை மின் உற்பத்தியில் முக்கியமானது

1. நதி 2. கடல் 3. வாவிகள் 4. நீர்வீழ்ச்சி

..............................

30. இதயத்துடிப்பை அறிய உதவும் கருவி

1. வெப்பமானி 2. பாரமானி 3. ஸ்ரெதெஸ்கோப் 4. ஸ்கான்

..............................

- **பாடலை வாசித்து அதன் கீழுள்ள 31 - 34 வரை நான்கு வினாக்களுக்கு புள்ளிக்கோட்டின் மீது விடை எழுதுக.**

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி
மலையாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றுமின்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே
கேணி நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே

31. ஆற்றுவெள்ளம் எப்போது வரும்? ------------------------------

32. இரண்டு மின்னலும் எந்நாடுகளின் பெயர்களைத் தாங்கியுள்ளன? ------------------------------

33. காற்று எவ்வாறு அடிக்கிறது? ------------------------------

34. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட பிராணி எது? ------------------------------

- **பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

35. மிதுல - ..............................

36. தே - ..............................

- **பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்களத்தில் எழுதுக.**

37. கதிரை - ..............................

38. நன்றி ..............................

- **பின்வரும் ஆங்கிலப் பதங்களின் கருத்துக்களைத் தருக.**

39. Table ..............................

40. Black ..............................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு


T.S. சுகுமாரன்
வெளியீடு 85



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

- **01 - 02 வரையான வினாக்களில் கூற்றுக்களுக்குப் பொருத்தமானவற்றைத் தெரிந்து சரியான இலக்கத்தைத் தருக.**

01. கொடுக்கப்பட்ட இருப்பிடம்



1. விடாமுயற்சியைக் குறிப்பது
2. களவாக பிறர் பொருளைப் பயன்படுத்துவது
3. குச்சிகளால் ஆக்கப்பட்டது

02. கொடுக்கப்பட்ட படத்திற்குப் பொருத்தமான வாக்கியம்



1. வீரியமானதும், கொடியதும்
2. நீரிலும் நிலத்திலும் வாழ்வது
3. நச்சுத் தன்மையுடையதும் சிறு பிராணிகளை உண்ணுவதும்


- **பின்வரும் கூற்றுக்களுக்குள் பொருத்தமான உருவங்களின் இலக்கத்தை உரிய இடத்தில் குறிக்குக.**

03. தூணைச் சுற்றாதே ☐

04. துரும்பைக் கிள்ளாதே ☐


05. தும்பியைக் கொல்லாதே ☐

06. மதுவை அருந்தாதே ☐




- **07 - 10 வினாக்களில் பொருத்தமற்ற உருவின் எண்ணினை சுற்றி வட்டமிடுக.**

07.




(1) (2) (3) (4)

08.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| அ | எ | ஓ | மூ |


09.




(1) (2) (3) (4)

**10. கொடுக்கப்பட்ட படத்தில் மூன்று விளையாட்டுக்கள் குழுவாகவே விளையாடப்படும். தனியாக ஒவ்வொருவர் விளையாடும் விளையாட்டு எது?**



(A)


(B)


(C)


(D)

- பின்வரும் வரைபைப் பார்த்து பொருத்தமான விடைகளை எழுதுக. கொடுக்கப்பட்ட சட்டங்களை ஒவ்வோர் தென்னை மரமாக கருதுக. அவை ஒரு பருவத்தில் காய்க்கும் தேங்காய்கள் தரப்பட்டுள்ளன.





11. அதிகூடிய விளைச்சலைத் தரும் தென்னை யாது? ..............................


12. இரண்டாவது கூடிய விளைச்சலைத்தருவது யாது? ..............................


13. விளைச்சல் குறைந்தவற்றை அகற்றி புதிய மரத்தை நாட்டுவதாயின் எதனை முதலில் அகற்ற வேண்டும்? ..............................


- **எண்கோலங்களைப் பூர்த்தி செய்க.**

14.

















15.




- **பின்வரும் வினாக்களுக்கு விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16. கொடுக்கப்பட்ட நீள் சதுரத்தில் எத்தனை ஒரு சென்றிமீற்றர் சதுரங்கள் உள்ளன?







*17. வனிதாவின் உயரம் 3' 2'', அவளை விட அவளது தங்கை 7'' குறைவு. அவ்வாறெனின் அவளது தங்கையின் உயரம் என்ன?* ........................

*18. ஒரு பாடசாலையில் திறந்த வெளியரங்கு மேடையின் உயரம் 4'. அதில் ஏறுவதற்காக ஒவ்வொன்றும் 6'' உயரமான படிகள் சில கட்டப்பட்டுள்ளன. அவ்வாறெனில் எத்தனை படிகள் கட்டப்பட்டிருக்கும்?* ........................

*19. ஒரு தோட்டவெளியில் 28 பேர் அதனைத் துண்டுகளாகப் பிரித்து ஆளுக்கு ஒரு துண்டாக பயிர் செய்கின்றனர். 4 துண்டுக்கு ஒரு கிணறு என்று கிணறுகள் ஒவ்வொருவருடைய துண்டுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறாயின் தோட்டத்தில் எத்தனை கிணறுகள் வெட்டப்பட்டிருக்கும்?* ........................

*20. ஒரு குதிரை மணித்தியாலத்துக்கு 20 கி. மீற்றர் வேகமாக ஓடும். 8 மணித்தியாலத்தில் எத்தனை கி. மீற்றரை ஓடி முடிக்கும்?* ........................

- பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் எண்களை அவற்றுக்கு நேரே எழுதுக.

▸ 21 - 24 வரையிலான வரிசைகளில் ஒன்றுக்கொன்று பகையான விலங்குகளின் சோடி இலக்கங்களைத் தருக.

| | 1 | 2 | 3 | 4 | |
|---|---|---|---|---|---|
| 21. | மயில் | கிளி | தேவாங்கு | கோழி | ............ |
| 22. | உடும்பு | பாம்பு | முதலை | கீரி | ............ |
| 23. | மாடு | வல்லூறு | கோழி | குரங்கு | ............ |
| 24. | குயில் | தேன்சிட்டு | செண்பகம் | காகம் | ............ |

- பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

25. உவர் மண்ணில் விளையத்தக்க தாவர இனங்களில் ஒன்று

| தேயிலை | தென்னை | கொக்கோ | இறப்பர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |


........................

26. இதன் நகர்வு செய்தி ஏதோ தருவதாகக் கருதப்படும்


1



2



3



4


........................


27. பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளையாத பிராணி


1


2


3


4


5

........................

# மதுரை ஆதீனத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் நித்தியானந்தா மீது குற்றச்சாட்டு



(சென்னை)

மதுரை ஆதீன மடத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் எழுதி, பழியை தங்கள் மீது போடுவதாக நித்தியானந்தா மீது மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு புகார் கூறியுள்ளது.

மதுரை ஆதீனம் அருணாகிரி சுவாமிக்கு வெடிகுண்டு மிரட்டல கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் முகவரி மீனாட்சி பிள்ளைகள் என எழுதப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் மதுரை ஆதீனமடத்தில் வெடிகுண்டு சோதனை நடத்தியதில் எதுவும் கிடைக்க வில்லை. இந்நிலையில் மதுரை மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு பொலிஸ் அதிகாரிக்கு புகார் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து மதுரை ஜெய்ஹிந்த்புரத்தை சேர்ந்த ஜெகதல பிரதாபன் தமிழக தலைமை செயலர ஆகியோருக்கு அனுப்பிய புகார் மனுவில் மதுரை மீனாடசி பிள்ளைகள் அமைப்பின் செயலாளராக உள்ளேன். மதுரை ஆதீனம் மடத்தை அரசே ஏற்று நடத்தக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தேன்.

இவ்வழக்கை திசை திருப்பும் நோக்கத்திலும் மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு நிர்வாகிகளை மிரட்டும் பொருட்டும் மதுரை ஆதீன மடத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் எழுதி பழியை எங்கள் மீது நித்தியானந்தா போட்டுள்ளார்.

இவ்வழக்கை விசாரிக்கக் கூடாது என இன்ஸ்பெக்டருக்கும் என் பெயரில் மிரட்டல் கடிதம் போயுள்ளது. இதை விசாரித்து உரியவரை கைது செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# தூக்குத் தண்டனை கைதி இறந்த பின் ஜனாதிபதியால் தண்டனை குறைப்பு

(பெங்களூர்)

தூக்குத்தண்டனை பெற்ற கைதி இறந்து ஐந்து ஆண்டுகளுக்கு பின், அவர் அனுப்பிய கருணை மனு அடிப்படையில், ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் கடும் விமர்சனத்துக் குள்ளாகியுள்ளது.

வழக்கை விசாரித்த மாவடட நீதிமன்றம், கைதிக்கு 2005 இல் தூக்குத்தண்டனை விதித்தது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்தபோது, உயர் நீதிமன்றமும் தூக்குத்தண்டனையை உறுதி செய்தது.

பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதியான பாபுராவ், ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார். கடந்த, ஜூன் 20 ஆம் திகதி ஜனாதிபதியின் பார் வைக்கு கருணை மனு வந்த போது, பாபுராவின் தூக்குததண்டனையை இரத்து செய்து, ஆயுள் தண்டனையாக குறைத்து கையெழுத்திட்டார். ஆனால், பணடு பாபுராவ், பெல்காம் சிறையில் இருந்த போது, நோயினால் பாதிக்கப்பட்டு 2007 இல் 31 ஆவது வயதில் இறந்து விட்டார்.

இந்த தகவலை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் மத்திய உள்துறை அலுவலகத்துக்கு முறைப்படி, கர்நாடக சிறை அதிகாரிகளோ, உள்துறை அலுவலகமோ தெரிவிக்கவில்லை. அதனால், கவனக்குறைவு காரணமாக நடந்த சம்பவம், ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் முடிவு, என்பன விமர்சனத்திற்குள்ளாகி உள்ளது.

# சாப்பாடு கேட்டு வந்த முதியவரை உதைத்த நித்தியானந்தாவின் சீடர்

(சென்னை)

சாப்பாடு கேட்டு வந்த முதியவர் ஒருவரை மதுரை ஆதீன மடத்திலிருந்து வெளியே தள்ளி, அவரை நித்தியானந்தாவின் சீடர் தாக்கும் கொடூர காணொளிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகை ரஞ்சிதா, பெண் சீடர் ஆர்த்தி கற்பழிப்பு, பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது என தொடர் வழக்குகளில் சிக்கியுள்ள நித்தியானந்தா, தற்போது பிணையில் உள்ளார்.

கர்நாடக பிடதி ஆசிரமத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளதால் தற்போது மதுரை ஆதீனத்தில் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அவரது சீடர் ஒருவர், கடந்த 10 ஆம் திகதி சாப்பாடு கேட்டு வந்த முதியவர் ஒருவரை தாக்கிய சம்பவம் தமிழக செய்தி நிறுவனமான சன்நியூசில் ஒளிபரப்பாகி உள்ளது. இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை அந்த சீடர் முதியவர் கன்னத்தில் அறைந்தும் காலால் உதைத்தும் கொடூரமாக தாக்கியிருக்கிறார்.

# காலவரையற்ற உண்ணாவிரதம் களமிறங்கும் ஏர் இந்தியா விமானிகள்

(சென்னை)




ஏர் இந்தியா விமானிகளின் வேலைநிறுத்தம் நேற்றுடன் 48 ஆவது நாளை எட்டியிருக்கும் நிலையில், நேற்று முதல் புதுடில்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்வதென இந்திய விமானிகள் சங்கம் (இந்தியன் பைலட்ஸ் கில்டு) முடிவு செய்துள்ளது.

ஊதிய உயர்வு, போயிங் விமான சிறப்பு பயிற்சி, இதர சலுகைகள் என பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஏர் இந்திய விமானிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதற்கு மத்திய அரசு, டில்லி உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மத்திய விமான அமைச்சர் அஜித் சிங் 100 இற்கும் அதிகமான விமானிகளை பணிநீக்கம் செய்தார். இருப்பினும் இதர விமானிகள் போராட்டத்தை கைவிடவில்லை.

இந்நிலையில் தங்களது போராட்டத்தை காலவரையற்ற போராட்டமாக ஏர் இந்தியா விமானிகள் அறிவித்துள்ளனர்.

# 70 அடி கிணற்றில் வீழ்ந்த சிறுமி 86 மணி நேரத்தின்பின் சடலமாக மீட்பு




(புதுடில்லி)

அரியானா மாநிலத்தில் 70 அடி ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்த 4 வயது சிறுமியை, 86 மணி நேர போராட்டத்துக்கு பிறகு இராணுவத்தினர் இந்தச் சிறுமியை சடலமாக மீட்டுள்ளனர்.

பிறந்த நாள் விழா கடந்த புதன்கிழமை மாலை இடம் பெற்று உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்க, மற்ற குழந்தைகளுடன் மஹி வீட்டுக்கு அருகில் ஓடிபபிடித்து விளையாடிக் கொணடிருந்தாள். அப்போது யாரும் எதிர்பாராத விபரீதம் நடந்துவிட்டது. ஆழ்துளை கிணற்றுக்காக தோண்டப்பட்டிருந்த குழிக்குள் மஹி விழுந்து விட்டாள். மற்ற குழந்தைகள் பயத்தில் அலற, சத்தம் கேட்டு எல்லோரும் வெளியில் ஓடி வந்தனர்.

உடனடியாக பொலிஸுக்கும் தீயணைப்புப் படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறுமி விழுந்த இடத்தில் குர்கான் பொலிஸ் இணை கமிஷனர் அனில் ராவ் தலைமையில் பொலிஸார் விரைந்து வந்தனர். இரவு நேரமாகி விட்டதால் செய்வதறியாமல் திகைத்தனர். முதல்வர் பூபிந்தர் சிங் வரை தகவல் பரவ, அவசரமாக ராணுவ மீட்புக் குழுவினர் வரவழைக்கப்பட்டனர். தேசிய பாதுகாப்புப் படை, உள்ளூர் பொலிஸார், இராணுவ வீரர்கள், தீயணைப்புப் படை வீரர்கள் என எல்லோரும் குழந்தையை மீட்க களம் இறங்கினர். இன்ஜினியர்களும் வரவழைக்கப்பட்டனர்.

சிறுமி விழுந்த குழியின் அகலம் குறைவாக இருந்தது. மேலும் 70 அடி ஆழம் இருந்தது. உடனடியாக குழிக்குள் பைப் மூலம் ஒட்சிசன் செலுத்தப்பட்டது. ஆனால், தண்ணீர், உணவு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டது. இதற்கிடையில் குழிக்கு அருகிலேயே மற்றொரு பள்ளம் தோண்டும் பணி தொடங்கியது. இராட்சத இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு கவனமாக பள்ளம் தோண்டப்பட்டது. அதற்குள் வெயில் 111 டிகிரி அளவுக்கு சுட்டெரித்தது. மேலும் சூறாவளி காற்றில் புழுதி பறந்தது. இதனால் மீட்புப் பணியை விரைந்து செய்ய முடிய வில்லை. எனினும் மனம் தளராமல் இராணுவ வீரர்களும், நிபுணர்களும் பள்ளம் தோண்டி கொண்டிருந்தனர்.

50 அடிக்கு கீழ் பள்ளம் தோண்டப்பட்ட நிலையில் திடீரென பாறை இருந்ததால் மீட்புப் பணி ஸ்தம்பித்தது. இயந்திரங்கள் கொண்டு பாறையை உடைத்தால், சிறுமி இருக்கும் குழியில் மண் சரிவு ஏற்படும் என்று அஞ்சப்பட்டது.

அதனால் முடிந்த வரை இராணுவ வீரர்கள் கைகளாலேயே பாறையை சிறிது சிறிதாக உடைத்து எடுத்தனர். பதற்றமான நிலையில நேற்றுக் காலை சிறுமியை சடலமாக மீட்டனர் .

# சினிமாவில் நடிக்க முடியாததால் தூக்கில் தொங்கிய நபர்

(சென்னை)

சினிமாவில் ஹீரோவாக நடிக்க வேண்டும் என்ற ஆசையுடன் அலைந்து திரிந்த நபரொருவர், அது நிறைவேறாத நிலையில் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு, கோயம்புத்தூரைச் சேர்ந்த மோகன்ராஜ் (வயது 35), சொந்தமாக நகைப் பட்டறை வைத்து வியாபாரம் செய்து வந்தார்.

இவருக்கு மனைவி சுதா, அழகான இரு பெண் குழந்தைகளும் உள்ளனர்.

நகைப் பட்டறை வைப்பதற்கு முன்பு திரைப்பட தொழில்நுட்ப டிப்ளோமாவை மோகன் ராஜ் முடித்துள்ளார் எனறு தெரிகிறது.

இதனால் சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் அடிக்கடி தன்னை விதம் விதமாக புகைப் படமெடுத்துக்கொண்டு அந்த ஆல்பத்துடன் சென்னை செல்வார்.

ஆனால் ஒரு துரதிர்ஷ்டம், மோகன்ராஜுக்கு சர்க்கரை நோய் வந்து விட்டது. இதனால் உடல் மெலிந்தது.

இதனால் பெரும் அதிர்ச்சியடைந்த மோகன்ராஜ், இனிமேல் என்னால் சினிமாவில் நடிக்க முடியாதா, ஹீரோவாக முடியாதா என்று வருத்தப்படத் தொடங்கினார்.

இத்தனை நாள் சினிமாக் கனவு நிறைவேறாமல் போய் விடுமோ என்று பயந்து போன அவர் வருத்தத்தில் தனது பட்டறையில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

தமிழ்சினிமா வாழ வைத்த கோடீஸ்வரர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆனால் சினிமாவால் உயிரை விட்ட நபரகளை கணக்கில் கொள்வது கஷ்டமாகும்.

# கோழிக்குஞ்சுக்கு அடையாள அட்டை

(நகரி)

ஆந்திராவில் கோழிக் குஞ்சு பெயரில் ஆதார் அடையாள அட்டை தயார் செய்யப்பட்டு, ஒரு கிராமத்திற்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய அளவில் மக்கள் எந்த இடத்தில் வசித்தாலும், அவர்கள் அங்கு வசிக்கின்றனர் என்பதற்கு அடையாளமாக, ஆதார் என்ற பெயரில் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை, மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்நிலையில், ஆந்திராவில் கோழிக் குஞ்சு பெயரில், ஆதார் அடையாள அட்டை தயார் செய்யப்பட்டு, ஒரு கிராமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆதார் அட்டை முகவரியில், கோழிக் குஞ்சு, தகப்பனார் பெயர், பெட்டைக் கோழி, ராம சமுத்திரம், சித்தூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம் - 517417 என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. கணினி மூலம் தயாரிக்கப்பட்ட ஆதார் அட்டையின் எண் C 3175852391, N 31758523 என முத்திரையிடப்பட்டு உள்ளது. யார் பெயருக்கு ஆதார் அட்டை அனுப்பப்பட்டு உள்ளதோ, அவரிடம் மட்டுமே அதற்கான தபாலைச் சேர்க்க வேண்டு மென்ற நிபந்தனை உள்ளதால், கோழிக் குஞ்சு பெயருக்கு வந்த ஆதார் அட்டை தபாலை பிரித்துப் பார்க்க அனுமதி கேட்ட கிராம மக்களிடம், தபாலை வழங்க அதிகாரிகள் மறுத்து விட்டனர். பின்னர் ஆதார் அட்டை விநியோக மையத்தின் பெங்களூர் முகவரிக்கு, அந்த தபாலை அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

# நியூயோர்க்கையே அதிரவைத்த "யோகா" கோசம்



அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் ஓங்கார கோஷத்தை ஒலித்தனர்.

இந்த ஆண்டின் நீண்ட பகல் பொழுது கடந்த 20ஆம் திகதி காணப்பட்டது. 12 மணி நேரம் முழுவதும் வெயில் காணப்பட்டதை யொட்டி நியூயோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில், இலவச யோகா பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

தலா இரண்டு மணி நேரம் என்ற வகையில் நான்கு பிரிவுகளாக யோகா வகுப்புகள் நடத்தப்பட்டன. ஆண், பெண், கறுப்பர், வெள்ளையர் என்ற பாகுபாடில்லாமல் 1,500இற்கும் அதிகமான மக்கள் இந்த யோகா வகுப்பில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

முதலாவதாக வந்து கலந்து கொள்ளும் 1,500 பேருக்கு இலவச தரை விரிப்புகள் வழங்கப்பட்டன.

அக்குபஞ்சர் நிபுணர் திரிசனா காரே, அகில இந்திய யோகா சாம்பியன் ராஜஸ்ரீ சவுத்ரி உள்ளிட்டோர் யோகா வகுப்பை நடத்தினர்.

கொளுத்தும் வெயிலை கூட பொருட்படுத்தாமல் பலர் யோகாவை செய்தனர். சில யோகாசனங்களுக்கு முன்னதாக 'ஓம்' என்ற ஒலி எழுப்பப்பட்டது. இந்த கோஷம் விண்ணை முட்டும் அளவுக்கு ஒலித்தது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்வு மிட்ரோம்னியை எதிர்க்கும் ஒபாமா



இந்தியா, சீனா, மெக்சிகோ, பிலிபபைன்ஸ் போன்ற வெளி நாட்டவருக்கு வேலை வாய்ப்பை ஏற்றுமதி செய்யும் மிட் ரோம்னி அமெரிக்க ஜனாதிபதியாக கூடாது என்று தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா நேரடியாகவே தாக்குதலைத் தொடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து வருகிறது.

ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு ஆட்சி செய்துவரும் பராக் ஒபாமா, தன்னுடைய பதவியை மிட் ரோம்னி பறித்துவிடுவாரோ என்ற அச்சத்துடன் காணப்படுகிறார். அதன் விளைவாக அவருடைய ஒவ்வொரு சொல்லையும் செயலையும் கவனித்துத் தனது பிரசாரத்தை அமைத்துக் கொள்கிறார்.

சீனாவை எதிர்த்து நிற்பேன் என்று மிட் ரோம்னி பத்திரிகைகளுக்குப் பெரிய விளம்பரம் கொடுத்துள்ளார். அதே சமயம் தி வொஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை, மிட் ரோம்னி தன்னுடைய பெய்ன் கேபிடல் நிறுவனத்தின் வேலைகளை அயல் பணி ஒப்படைப்பு என்ற பெயரில் இந்தியா, சீனா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகத் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ள ஒபாமா, இப்படிப்பட்டவருக்கு வாக்களிக்கலாமா என்று மக்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

புளோரிடா மாகாணத்தின் தம்பா என்ற இடத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஒபாமா பேசுகையில், அமெரிக்கர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களுடைய வேலைவாய்ப்பை எப்படியெல்லாம் பெருக்க முடியும் என்று பார்க்கிற ஜனாதிபதிதான் நமக்குத் தேவை.

அமெரிக்காவில் வேலை வாய்ப்பை அதிகரிக்கப் போகிறவர்தான் நமக்குத் தேவை. நான் அந்த வேலையைத்தான் செய்து வருகிறேன். அதற்காகத்தான் நான் ஜனாதிபதி பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டி போடுகிறேன். என்றார்.

உலகச் செய்திகள்

# மீண்டும் விண்வெளிக்கு பயணமாகிறார் சுனிதா



இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மீண்டும் ஜுலை மாதம் விண்வெளிக்குப் பயணமாகிறார்.

கடந்த 2006ஆம் ஆண்டு சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றார்.


அங்கு 6 மாதங்கள் தங்கி ஆய்வு மேற்கொண்டார். இந்த நிலையில் அவரை மீண்டும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்ப அமெரிக்காவின் நாசா மையம் முடிவு செய்துள்ளது.

இவர் வருகிற ஜுலை 14ஆம் திகதி கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் இருந்து புறப்பட்டு செல்கிறார். அவருடன் யூரி மலென் சென்கோ, அதிஹிகோ ஹொசிடு ஆகியோரும் செல்கின்றனர்.

விபத்தில் பலியான கல்பனா சாவ்லாவுக்கு பிறகு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 2 பெண் விண்வெளி வீராங்கனைகளை அமெரிக்காவின் நாசா விண்வெளிக்கு அனுப்பியது.

அவர்களில் ஒருவர் சுனிதா வில்லியம்ஸ், அவர் ஏற்கனவே விண்வெளிக்கு பயணம் செய்த போது 195 நாட்கள் தங்கி இருந்துள்ளார். 4 முறை விண்வெளியில் நடந்துள்ளார். அப்போது 29 மணி 12 நிமிட நேரம் செலவழித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழல் குற்றச்சாட்டில் பராகுவே அதிபர் பதவி நீக்கம்



ஊழல் குற்றச்சாட்டில் பராகுவே அதிபர்பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். லத்தீன் அமெரிக்க நாடான பராகுவேயில் அதிபராக பெர்னாண்டோ லூகோ பதவி வகித்து வந்தார். இவர் மீது ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால் அவருக்கும் எம்பி.க்களும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது.

எனவே, இவருக்கு எதிராக எம்.பி.க்கள் போர்க்கொடி உயர்த்தினர். இவரை பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்ற செனட் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு வாக்கெடுப்பு நடைபெற்றது.

அதில், பெர்னாண்டோ லூகோவுக்கு எதிராக 39 வாக்குகளும், ஆதரவாக 4 வாக்குகளும் கிடைத்தன. . எனவே, லூகோ அதிபர் பதவியை இழந்தார். வாக்கொடுப்பு முடிந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட லூகோ குட்பை என சிரித்தபடியே கூறி விடைபெற்றார்.

மேலும் அவர் கூறும்போது, பராகுவேயின் ஜனநாயகம் காயப்படுத்தப்பட்டு விட்டது என்றும் வருத்தத்துடன் கூறினார். இதேவேளை, ஜனாதிபதி பதவியில் இருந்து லூகோ நீக்கப்பட்டதற்கு அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பராகுவேயில் இருந்து தங்களது தூதர்களை திரும்ப பெற்றனர்.

வெனிசுலா அதிபர் ஹுகோ சாவேசும் பதவி நீக்கத்துக்கு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். லூகோ பதவி விலகியதை தொடர்ந்து துணை ஜனாதிபதி பெடரிகோ பிராங்கோ புதிய அதிபராக பதவி ஏற்றார். அதை தொடர்ந்து நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளது என்றார்

# கருவில் இருந்த கட்டி அகற்றல் மருத்துவ உலகின் சாதனை

அமெரிக்காவின் மியாமி மாகாணத்தில் 17 வாரக் கருவின் வாய்ப் பகுதியில் இருந்த கட்டி அறுவை சிகிச்சை மூலமாக வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

தாயின் வயிற்றில் இருந்த கருவை ஸ்கேன் செய்து பார்த்த போது, குழந்தையின் வாய் அருகே ஒரு கட்டி உருவாகி இருந்ததும் அந்த வகை கட்டி மிக வேகமாக வளரக் கூடியது என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து உடனடியாக எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்பட்டு தற்போது தாயும், கருவும் நலமாக உள்ளனர்.

# மெக்சிக்கோவில் இப்படியும் நடக்கிறது




வட மெக்சிகோவில் உள்ள சிட்டியின் சிறப்புச்சந்தையில் நின்று கொண்டிருந்த வானில், 14 சிதறிய உடல்கள் கண்டெடுக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மெக்சிகோவில் போதைப் பொருள் புழக்கம் அதிகமாக காணப்படுகின்றது, அங்கு அடிக்கடி போதைப் பொருள் கும்பல்களிடையே சண்டை ஏற்படுவது வழக்கம்.

அதே போன்று சிதைந்த நிலையில் பல உடல்களும் கண்டெடுக்கபடுகின்றன. இந்நிலையில் வட மெக்சிகோ சிட்டியில் உள்ள சிறப்புச்சந்தையில் நின்று கொண்டிருந்த வானில், சிதறிய நிலையில் 14 உடல்கள் மற்றும் ஒரு மிரட்டல் கடிதமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.இந்த சிதறிய உடல்களில் 10 ஆண், 4 பெண் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மெக்சிகோ அட்டர்னி ஜெனரல் அலுவலகம் உடனடியாக நம்ப மறுத்தது குறிப்பிடத்தக்கது.

# கடலில் மூழ்கியோரை தேடும் மீட்புப் பணிகள் நிறுத்தம்



அவுஸ்ரேலிய கிறிஸ்மஸ் தீவு கடற்பகுதியில் இடம்பெற்ற அகதிகளின் படகு விபத்தினை தொடர்ந்து கடந்த மூன்று நாட்களாக அவுஸ்ரேலிய மீட்பு பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டதன் பின்னர் இதுவரையில் எவரையும் மீட்கப்படவில்லை என அவுஸ்ரேலிய நீர்வள பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் 90 பேர் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூழ்கிய படகில் 200 பேர் வரையில் பயணித்திருக்கலாம் என கூறப்படுகின்ற போதிலும், சரியான எண்ணிக்கை எவருக்கும் தெரியாமல் இருப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

## கனடாவில் குற்றம் புரியும் அகதிகளை நாடு கடத்த புதிய சட்டம்

கனடாவில் குடியேறுவதற்கான சட்டத்தில் மிகப் பெரிய அளவு திருத்தங்களைச் செய்யும் புதிய சட்டம் ஒன்றை கனேடிய அரசு அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய சட்டத்தின் மூலம் ஆறு மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத் தண்டனை பெற்ற அகதிகள், நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்கள் மற்றும் விருந்தினர்களை எளிதாக நாடு கடத்த முடியும்.

மேலும் இவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு எவ்வித அனுமதியும் கிடையாது.

இதுதவிர கனடாவுக்குள் அனுமதிக்கப்பட முடியாதவர்கள், நாட்டின் நலனுக்கு எவ் வித பிரச்சினையையும் ஏற்படுத்த மாட்டார்கள் என்று கருதினால் அமைச்சரகள் அவர்களை நாட்டிற்குள் அனுமதிப்பதற்கும் இந்த புதிய சட்டம் வழிவகுக்கும்.

# புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் வைபவ ரீதியாகத் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் அழிவடைந்த கட்டடங்கள் பல மீள் புனரமைக்கப்பட்டும், புதிதாக அமைக்கப்பட்டும் நேற்று முன்தினம் வைபவரீதியாகத் திறந்த வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இக்கட்டடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் புதிய கட்டடம் 39 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சமாச கட்டடமும் 10 இலட்சத்து 58 ஆயிரம் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டதுடன், ஒலுமடுவில் பொது மண்டபம் 20 இலட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் ஆண் ஆசிரியர்களுக்கான புதிய விடுதி 50 இலட்சம் ரூபா செலவிலும், சமயலறை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டும் திறந்து வைக்கப்பட்டது.

கருவேலன்கண்டல் பொது நோக்கு மண்டபம் 6 இலட்சத்து 81 ஆயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டதுடன், கூலான்முறிப்பு பொதுநோக்கு மண்டபம் 18 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டும் திறந்து வைக்கப்பட்டது.

நிராவிப்பிட்டி மேற்குக் கிராமத்தில் உள்ள உள்வீதி 2 இலட்சத்து 21 ஆயிரம் ரூபா செலவில் சீமெந்து இடப்பட்டும், 21 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா செலவில் முன்பள்ளிக் கட்டடமும் புதிதாக திறந்து வைக்கப்பட்டது.

20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வண்ணான்குளம் பொதுநோக்கு மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு நகரத்துக்கான கணினிப் பயிற்சிக் கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.பி.ரத்னநாயக்க, வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியூதீன், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இ.ரவீந்திரன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கட்டடங்களை வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

## இலவச மருத்துவ முகாம் மக்களுக்கு வரப்பிரசாதம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அமரர் லயன் டாக்டர்.வே.தம்பித்துரையின் ஞாபகார்த்தமாக கடந்த 24.03.2012 அன்று நடத்திய இலவச மருத்துவ முகாம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இம் முகாமில் 200 இற்கும் மேற்பட்டோர் கலந்து பயனடைந்தனர். மேலும் கண் பரிசோதனை செய்யப்பட்டு 150இற்கு மேற்பட்டோரிற்கும் இலவசமாக கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

லயன். டாக்டர். அருளானந்தம் அவர்களால் இரத்த அழுத்தம் மற்றும் குரு திப்பரிசோதனை ஆ க ி ய வை மேற்கொள்ளப்பட்டதுடன் பொது வைத்திய நிபுணர் டாக்டர். சிறீதரன் அவர்களின் வைத்திய ஆலோசனையும் இடம் பெற்றது.

மீள் குடியேறிய பிரதேசமாகிய தென்மராட்சி பிரதேச மக்களிற்கு லயன்ஸ் கழகத்தினரின் இச்செயற்பாடு பயனுள்ளதாக அமைந்ததாகப் பயனாளிகள் தெரிவித்தனர். (153)

## வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கு மனவளக் கலைப் பயிற்சி



தத்துவ ஞானி வேதாந்திரி மகரிஷி அவர்களின் மனவளக் கலைப் பயிற்சி வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கும் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்களுக்கும் வழங்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தியாவிலுள்ள உலக சமுதாய சேவா சங்கத்தின் அங்கத்தவர்கள் இங்கு வருகை தந்து இந்த மனவளக்கலைப் பயிற்சியினை வழங்கியுள்ளனர்.

மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், வலய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மனவளக்கலை பற்றிய விளக்கவுரை, பயிற்சி, பயிற்சியினை வீட்டில் ஒவ்வொருவரும் தொடரக்கூடிய வகையிலான கையேடு என்பன இச்செயலமர்வில் வழங்கப்பட்டன.

ஒருநாள் பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழும் வழங்கப்பட்டது. ஆசிரியர், மாணவர்களுக்கு மிகவும் பெறுமதிவாய்ந்த இந்த மனவளக் கலைப்பயிற்சி தொடர்ந்தும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (06)

## சுகவீன விடுமுறைப் போராட்டம்

கொழும்பு ஆயுர்வேத அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நாளை நாடளாவிய ரீதியில் ஒரு நாள் சுகவீன விடுமுறைப் போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர். ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளின் சம்பள உயர்வு, மற்றும் ஆயுர்வேத சேவைப்பிரமான மாற்றம் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி போராட்டம் நடைபெறும் என . கொழும்பு ஆயுர்வேத அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### காணிகளை...

வருகின்றது, ஆனால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட விதிமுறைகளின்படி மக்களுக்கு சொந்தமான நிலங்களை எவருமே சுவீகரித்துவிட முடியாது அதற்கு இராணுவத்தினர் மட்டும் விதிவிலக்கல்ல. தனியாருக்குரிய எந்தக்காணிகளையும் இராணுவத்திற்கு வழங்க முடியாதென்பதில் அரசு உறுதியாக உள்ளது.

எவையெல்லாம் நடைபெறமாட்டாதென பிரசாரம் செய்யப்பட்டு வந்ததோ அத்தனை விடயங்களும் இன்று நடந்தேறி வருகின்றன. குறிப்பாக திருமுறிகண்டிப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றப்படமாட்டார்கள் அப்பகுதி இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு விட்டதாக கூறப்பட்டது ஆனால் நேற்று அப்பகுதியில் நாம் மக்களை மீளக்குடியேற்றியுள்ளோம், இதுபோல் சாந்தபுரம் பகுதியில் சுமார் 400 வரையான குடும்பங்களை சார்ந்த மக்களின் காணிகளையும் இராணுவத்தினர் சுவீகரித்துவிட்டதாக பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன ஆனால் இன்று அந்த 400 குடும்பங்களைச் சார்ந்த மக்களும் தமது வாழ்விடங்களில் மகிழ்வோடு வாழ்ந்து வருகின்றார்கள்.

மக்களுக்குரிய மேலும் சிலபகுதிகள் பிற தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றதென்பதை நாம் அறிவோம் குறிப்பாக பரவிப்பாஞ்சான் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை பெற்றுத்தருமாறு எம்மிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் எனவே பரவிப்பாஞ்சான் பகுதியிலும் மக்கள் விரைவாக மீளக்குடியேறும் நிலைமை உருவாகும். ஆகவே பொறுத்திருங்கள் அரசியல் இலாபம் கருதி வெளியிடப்படும் கருத்துக்களின் உண்மைத்தன்மையை விளங்கிச் செயற்படுங்கள் எனத் தெரிவித்தார்.

### அதி கஷ்ட...

வடமாகாணத்தில் இதுவரை காலமும் பாடசாலை அதிபர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அதிகஷ்ரப் பிரதேச, கஷ்டப்பிரதேச படிகள் வடமாகாணக் கல்விய மைச்சினால் திடீரென நிறுத்தப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் குழப் பத்தை உண்டு பண்ணியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வட மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன், நிறுத்தப் பட்ட பாடசாலைகளின் தகவல்கள் உரிய முறையில் சீர்செய்யப்படும் வரை தொடர்ந்தும் படிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

குறிப்பாக மீள்குடியேற்றம் நடைபெறும் வன்னிப்பிரதேச பாடசாலைகளின் படிகள் நிறுத்தப்பட்டது அங்குள்ள ஆசிரியர் களின் நலனில் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பை உண்டுபண்ணும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நிறுத்தப்பட்ட படிகள் மீளவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சில் கடந்த 21ஆம் திகதிநடைபெற்ற ஒன்றுகூடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

படிகள் நிறுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உடனடியாக தமது வலயக் கல்வி அலுவலகம் ஊடாக அதற்கான சீர்செய்தல் மேன்முறையீட்டினை வடமாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி அதன் பிரதியினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (137)

### கிளிநொச்சி...

இந்நிகழ்வில், பிரதேச செயலர்கள், கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினர், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### கொழும்புக்கு...

அங்கம் வகிக்கும் சிலர் வெளிப்படுத்தி வரும் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்கள் தொடர்பிலும் சிவ் சங்கர் மேனன் புதுடில்லியின் கவலையை வெளிப்படுத்துவார் எனவும் நம்பப்படுகின்றது.

அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுவார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள், மீள்குடியேற்றம் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்காவுக்கு மட்டும் அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பிலும் அவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்துவார் என இச்செய்திகள் குறிப்பிடுகின்றன

அதேவேளை, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது வடபகுதியில் நிலை கொண்டுள்ள படைத்தரப்பினரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### இலங்கையின்...

படுத்தியுள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் சுயாதீன மனித உரிமை அமையம், கருத்து வெளியீட்டு சுதந்திர பாதுகாப்பு, உள்நாட்டு இடம் பெயர் மக்களின் மனித உரிமை போன்ற விடயங்கள் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு குறித்து ஐ.நா. மனித உரிமை கவுன்ஸின் ஆதரவுடன் உலகளாவிய கால இடைவெளிக்குள் விமர்சனக் குழு ஆரம்பிக்கப்பட்டது.

இக்குழு ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமை செயற்பாடுகளையும் கண்காணித்து விமர்சனத்திற்கு உட்படுத்தும்.

## இணுவிலில் ஒரே இரவில் இரண்டு இடங்களில் திருட்டு

இணுவில் புகையிரத நிலை யத்திற்கு அருகில் உள்ள கள்ளுத் தவறணையில் திருட்டு நடை பெற்றுள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை தவறணையில் கள்ளு, சிகரெட் வகைகள், மற்றும் உணவுப் பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக கள்ளுத் தவறணை முகாமையாளர் தெரிவித்தார்.

10 ஆயிரம் ரூபா பெறுமதி யான சிகரெட்டுகள், உறைப்புச் சுவையுடைய சிற்றுண்டி உணவு வகைகள், மற்றும் 2 ஆயிரம் ரூபா பணம் ஆகியன திருடப்பட் டுள்ளன.

சுன்னாகம் பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான கள்ளுத தவறணையிலேயே இக் களவு நடைபெற்றுள்ளது. அதே தினத்தில் மருதனார்மடம் விவ சாயப் பாடசாலைக்கு அருகா மையில் உள்ள கோழிப் பண் ணையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள், 3 கையடக்கத் தொலைபேசிகள் திருடப் பட்டுள்ளன.

## 2000 இலங்கைப் புகலிடதாரிகள் சுவிஸிலிருந்து நாடு கடத்தல்

2000 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடுகடத்தப்பட உள்ளதாக சுவிட்சர்லாந்து குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த இரண்டாயிரம் இலங்கையர்களினதும் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இந்த இலங்கையர்கள் சுவிட்சர்லாந்தில் புகலிடம் கோரியுள்ளனர். எவ்வாறெனினும், இரண்டாயிரம் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் மாதந்தோறும் 100 இலங்கையர்கள் புகலிடம் கோரி விண்ணப்பித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இவர்களில் பலர் புகலிடம் கோருவதற்கான சரியான காரணங்களை காட்டுவதில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் 30,000 இலங்கையர்கள் சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இரண்டாயிரம் இலங்கையர்களை நாடு கடத்தத்திட்டமிட்டுள்ள போதிலும் அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்ய அனுமதிஅளிக்கப்படும் என சுவிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### முதலீட்டு....


அபிவிருத்தியை மேற்கொள்வதில் காணிப்பிரச்சினை பிரதான தடையாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணிப் பிரச்சினைகள் வெளிப்படைத்தன்மையுடன் மிகவும் சுமூகமானமுறையில் தீர்க்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்கள் வலுவாக இயங்குவதன் மூலமும், நல்லாட்சியைஏற்படுத்துவதன் மூலமும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வு எட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# என் மீதான நடவடிக்கைக்கு மேலிட அழுத்தமே காரணம்

## அமைச்சர் அதாவுட குற்றச்சாட்டு



(கொழும்பு)

கடந்த வெள் ளிக்கிழமை நீதி மன்றத்தில் சரணடைந்து ஒரு மில்லியன் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்ட சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ன, தன் மீதான நடவடிக்கைகளுக்கு மேலிடத்து அழுத்தங்கள்தான் காரணம் என குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது தரப்பு நியாயத்தை கேட்காமலேயே தனக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மேலிடத்தில் இருந்துவந்த அழுத்தம் தான் காரணம் என்று பொலிஸ் உயர் அதிகாரிகளே தன்னிடம் கூறியதாக அமைச்சர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும மாவட்டத்தில் உள்ள கொஹொம்பதெனிய என்ற கிராமத்தில், மலையைக் குடைந்து எடுக்கப்படும் நிலக்கீழ் நீரை போத்தலில் அடைத்து விற்கும் வியாபாரத்தில் சிலர் ஈடுபடுவதை தடுக்க முனைந்தபோதே தன்மீது தனியார் சொத்துக்குச் சேதம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்படுவதாக அதாவுட செனவிரட்ன தெரிவித்தார்.

குறித்த நிலக்கீழ் நீர் வியாபாரத்துக்கு பிரதேச மக்களிடமிருந்தும் அரசியல் பிரதிநிதிகளிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியிருந்ததாகவும் அந்த வியாபார முயற்சியை நிறுத்துமாறு பிரதேச உள்ளூராட்சி சபை ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளின் அனுமதியின்றி குடிநீர் போத்தல் வியாபாரத்தை நடத்த முனைந்த வீட்டின் உரிமையாளர்களிடம் கலந்துரையாடிவிட்டு வந்த தன்னை விளக்க மறியலில் அடைக்குமாறு பொலிஸாருக்கு அரசின் மேலிடத்திலிருந்து அழுத்தம் வந்திருப்பதாக அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால் அமைச்சரின் இந்தக் குற்றச் சாட்டை பொலிஸ் தரப்பு மறுத்துள்ளது.

சட்டவிரோதமாகக் கூட்டம் சேர்த்தமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ன மற்றும் அவருடன் இருந்த 17 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேசசாளர் எஸ்.பி.அஜித் ரோஹண தெரிவித்தார்.

அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் பொலிஸாரிடம் இருப்பதாகவும் எந்த வித அழுத்தங்களும் இன்றி தாம் செயற்படுவதாகவும் அவர் கூறினார்.

# நானூறு இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் வெளிநாடுகளில் 400 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எட்டுப் பேர் தற்கொலைகளினாலும், 89 பேர் விபத்துக்களினாலும் 318 பேர் இயற்கையாகவும் உயிரிழந்துள்ளனர். அதிகளவானவர்கள் சவுதி அரேபியாவிலேயே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடாக 180 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த சிலர் வெளிநாட்டுச் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரு சிலர் மரண தண்டனை அனுபவித்து வருவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# 15 இலங்கை மீனவர்கள் விடுதலையாகினர்

(கொழும்பு)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 15 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூன்று படகுகளில் சென்ற மீனவர்கள் என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்குச் சென்ற மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


இந்தியாவில் விடுதலை செய்யப்பட்ட 15 மீனவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளமையினால் எதிர்வரும் வாரத்திற்குள் அவர்களை அழைத்து வர முடியும் எனவும் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் ஆந்திர பிரதேசத்தில் வைத்து 11 இலங்கை மீனவர்கள் இந்தியக் கரையோர பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு கூறியுள்ளது.

# ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரினார் சனத் ஜெயசூரிய

(கொழும்பு)



தனக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்க வேண்டுமெனத் தெரிவித்து கடிதம் எழுதியதற்காக, நாடாளுமன்ற உறுப்பினரும், துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரிய ஜனாதிபதி மகிந்தவிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அத்துடன் பிரதி அமைச்சர் பதவிக்கு விடுத்த கோரிக்கையையும் அவர் விலக்கிக் கொண்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம், மேலும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, சனத் ஜெயசூரிய பிரதி அமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

எனினும் இதுவரை அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை.

இந்தநிலையில், சனத் ஜெயசூரிய ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்த நியமனங்கள் உங்களின் தனியுரிமை என்று புரிந்து கொள்கின்றேன் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

இந்தக் கோரிக்கையை விடுத்ததற்காக மன்னிப்புக் கோருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# குண்டசாலை விவசாய நிலத்தில் விமான நிலையம் அமைக்க எதிர்ப்பு



கண்டி - குண்டசாலை விவசாய பூமியில் விமான நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக கூறி அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டம் ஒன்று கண்டியில் நேற்று இடம்பெற்றது.

குண்டசாலை விவசாயக் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், ஏனைய விவசாயக் கல்லூரி மாணவர்கள் எனப் பெருமளவானோர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

கண்டி - குண்டசாலை விவசாயக் கல்லூரியில் இருந்து ஆரம்பித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஊர்வலமாக வராப்பிட்டிய விவசாயக் கல்லூரி சந்தி வரை சென்றது.

இந்தச் சம்பவத்தை முன்வைத்து முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார பதவி விலகியுள்ள நிலையில் அவ்வாறு விமான நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என விவசாயத் துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

## தரமுயர்த்த நடவடிக்கை

வடக்கில் இருக்கும் அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் தரமுயர்த்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எந்தவிதமான அவசர தேவைகளையும் எதிர்கொள்ளும் வகையில் தரமுயர்த்தப்படும் அதேவேளை சகல விதமான விபத்துச் சேவைகளும் இந்த அபிவிருத்திப் பணியில் உள்ளடக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

## சீ4 வெடிபொருள் முல்லையில் மீட்பு

முல்லைத்தீவு - வெள்ளமுள்ளி வாய்க்கால் பிரதேசத்தில், மறைத்து வைக்கப்பட்டிருந்த 359 கிலோ கிராம் சீ4 வகையிலான அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பதில் பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த பணிப்புரைக்கமைய நேற்று முன்தினம் மாலை இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளிலிருந்து வருகிறது மலேரியா

(கொழும்பு)

இலங்கையில் அடையாளம் காணப்படுகின்ற மலேரியா நோயாளர்களைவிடவும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம் என மலேரியா ஒழிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கையில் இதுவரையான காலப்பகுதியில் 18 மலேரியா நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் சரத் தெனியாகெ தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து 38 மலேரியா நோயாளர்கள் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் விசேட வைத்திய திட்டமொன்றை நடைமுறைப் படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.